திவ்யசக்தி தீபிகை

1.10.1938

1.3

TL
௨௨௨ ௱௨11,N26
N38.13.1
159933

30

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 APR 1939
MADRAS

147

மாதந்தோறும் வெளிவரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரகாசந பத்திரிகை.

ஸம்புடம் 13] [நெம்பர் 1.

திவ்யார்த்த தீபிகை.

ஆசிரியர் :

ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

1—10—1938

விஷயஸூசிகை.

1. திருவாய்மொழி உரை 3 பாரம்.
2. ஆசார்யஹ்ருதயஸாரம் 1 பாரம்.

சென்னை நியூமன் அச்சுக்கூடம்.

விலை அணா 5] 1938 [தபால் சார்ஜ் தனி

இந்த தீபிகை கிடைக்குமிடங்கள் :—

நியூமன் பிரஸ், 19, டேவிட்ஸன் தெரு, ஜி. டி. மதராஸ்.

A. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், 45, மௌபரீஸ் ரோட், மைலாப்பூர்.

C. ரங்கய்ய நாயுடு, 27, சின்னசெட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை.

...nted & Published by T. Narayanaswami Naidu at Newman Press, 19, Davidson St...

* * * [மருந்தாகுமென்று] எம்பெருமானுடைய திருநாமங்களை இப்பெண்பிள்ளை செவிப்படச் சொல்லுவதே இந்நோய்க்குப் பரிஹாரமென்கிறாள். யுக்தாயுக்த நிரூபணம் பண்ணாமல் கண்டபடியே சொல்லுகிறவளுக்கு அலவையென்று பெயர்; இங்கே கட்டுவிச்சியைக் குறிக்கின்ற சொல் இது. பரிஹாரமுறைமை சொல்லவந்து தோன்றினபடியே பிதற்றுகின்ற இக்கட்டுவிச்சியின் சொல்லைநம்பி நீங்கள் க்ஷுத்ரதெய்வங்கள் வந்து ஸந்நிதிபண்ணுமிடமான நாற்சந்தி முதலானவற்றிலே செஞ்சோறு கருஞ்சோறுகளை யிடுவதனால் என்ன பயனுண்டு?

பின்னை என் செய்யவேணுமென்னில்; ஆச்ரிதர் அநாச்ரிதர் என்கிற வாசிபாராமல் ஸகலலோகங்களையும் பிரளயம் விழுங்காதபடி தான்விழுங்கி ரக்ஷித்து, ப்ரளயம் கழிந்தவாறே வெளிப்படுத்தின பரதேவதையின் திருநாமம் சொல்லவல்லீர்களாகில் இவள் உய்யப்பெறலாம். வேறுவகையான காரியங்கள் செய்வது இவளை இழப்பதற்கே உறுப்பாமென்றவாறு. ... (ச)

இவளைப்பெறும்பரிசு இவ்வணங்காடுதலன்றந்தோ! *
குவளைத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும்பயந்தனள் *
கவளக்கடாக்களிறட்டபிரான் திருநாமத்தால் *
தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின்தணியுமே. (ரு)

அன்னைமீர்	தாய்மார்களே !,
இவளை	இப்பெண்பிள்ளையை
பெறும்பரிசு	(நோய் தீர்ந்து) நாம் பெறுதற்குரிய மார்க்கம்
இ அணங்கு ஆடுதல் அன்று	வெறியாடுதலாகிற இக் காரியமன்று;
அந்தோ	ஐயோ!;
(இப்பெண்பிள்ளை)	
குவளை தட கண்ணும்	குவளை மலர்போன்றதாய் விசாலமான கண்களும்
கோவை செம் வாயும்	கோவைக்கனிபோன்று சிவந்த அதரமும்
பயந்தனள்	வைவர்ணியமடையப் பெற்றாள் ;.
(இதற்குத்தகுந்த பரிஹாரமென்ன வென்றால்)	

கவளம்	மதகரமான மருந்துகளைக் கவளங்கொண்டதாய்.
கடா	மதம்பெற்றதான
களிறு	(குவலயாபீட மென்னும்) யானையை
அட்ட	தொலைத்தருளின
பிரான்	ஸ்வாமியினுடைய
திரு நாமத்தால்	திருநாமோச்சாரண பூர்வகமாக
தவளம் பொடி கொண்டு	பரிசுத்தமான (ஸ்ரீவைஷ்ணவபாத) தூளியைக் கொண்டுவந்து
நீர் இட்டிடுமின்	நீங்கள் (இவள்மேல்) தூவுங்கோள்;
தணியும்	(இவளது நோய்) தீரும்.

* * * [இவளைப்பெறும் பரிசு.] மகளுடைய நோய் தீரவேணுமென்று நீங்கள் பண்ணுகிற பரிஹாரம் நோயை இன்னமும் அதிகப்படுத்தா நின்றதேயன்றித் தீரச்செய்கின்றதில்லையே; ஆனபின்பு இந்த முறைமைகளைவிட்டு நோயின்ஸ்வரூபத்திற்கு யோக்யமான பரிஹாரமுறைமையை அனுட்டிக்கப்பாருங்களென்கிறாள்.

இந்த நல்லசரக்கை இழவாமல் பெறவேண்டியிருந்தீர்களாகில் இப்படி விபரீதமான செயல்களைச் செய்வீர்களோ? பெறுதற்கு ஹேதுவென்று நினைத்து நீங்கள் செய்கிறகாரியம் இழத்தற்கன்றோ ஹேதுவாகின்றது. வேலனைக்கொண்டு வெறியாடுவிக்கின்றவிது இவளைப்பெறுதற்கு ஹேதுவாகுமோ? இவளது உயிர்மாய்வதற்கன்றோ இது ஹேது!. அநியாயமாய் இப்பெண்பிள்ளையை இழந்துவிடப் பார்க்கின்றீர்களே! அந்தோ! இப்படியும் ஒருகாரியம் செய்யலாமோ! என்கிற நிர்வேதம் முதலடியாக வடிவெடுத்திருக்கின்றது.

உலகத்தில் ஒரு வியாதிக்கு ஒரு சிகித்ஸை செய்தால் அது உத்தமமாக இருக்குமானால் க்ரமேண குணமன்றோ காணப்படவேணும். குணம்காணப் படாததோடு துர்க்குணமும் காணப்பட்டால் உடனே அந்த சிகித்ஸாக்ரமத்தை விட்டுத் தொலைக்கவன்றோ அடுப்பது; இங்கு இவளுடைய நிலைமை கண்டீர்களா! குவளைமலர் போன்று அழகியவாய கண்கள் விகாரப்பட்டனவே!; கொவ்வைக் கனிபோன்று பழுத்திருந்த அதரமும் நிறவேறுபாடுற்றதே! இங்ஙனே பயத் தலைக்கண்டுவைத்தும் இப்பரிஹாரமுறையைத் தவிர்க்கின்றிலீர்களே பாவிகாள்! என்கிறாள் இரண்டாமடியால்.

இவ்விடத்தில் ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"அவனுடைய வாய்புகு சோறன்றோ பறியுண்கிறது; 'தொண்டையஞ்செங்கனிவாய் நுகர்ந்தானை' என்றும் 'மணநோக்கமுண்டான்' என்றும் இவையிறே அவனுக்கு ஊண். இத்யாதி.

மாறன்பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருமங்கையாழ்வார் இரண்டிடத்திலே இரண்டு பாசுரங்களருளிச்செய்தார்; "வண்டார் பூமாமலர்மங்கை மணநோக்க முண்டானே!" என்றார் ஓரிடத்தில். பிராட்டியினுடைய கடாக்ஷ வீக்ஷணத்தையே எம்பெருமான் உணவாகக்கொண்டிருக்கிறானென்பது இதனால் தெரிவிக்கப்பட்டது. * கள்வன்கொல்லில் "என்மகள் தன் தொண்டையஞ் செங்கனிவாய் நுகர்ந்தானை" என்றார். இதனால் அதர ரஸத்தையே எம்பெருமான் உணவாகக்கொண்டவன் என்பது தெரிவிக்கப் பட்டது.

"பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்" என்கிறபடியே இப்பராங்குச நாயகியும் பிராட்டியேயன்றோ. இவளுடைய குவளைத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும் அழிந்தால் எம்பெருமானுடைய உணவு முட்டுப்பட்டதே! என்று அன்பர்கள் துடிக்கவேண்டு மத்தனையே.

பயந்தனள்—வைவர்ண்யமடையும்படியானாள் என்றவாறு. பயப்பு—நிற வேறுபாடு.

நாங்கள் செய்வது நேரான பரிஹாரமன்றாகில், நீ சொல்லிக்காண் என்று தாய்மார் தோழியை[illegible] பின்னடிகளில் நேரான பரிஹாரமுறை பகரப்படுகின்றது.

[illegible] 159933
022 211,126
138-13-1

தன்னைக் கொல்லுமாறு கம்ஸனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீட யானையை முடித்த கண்ணபிரானுடைய திருநாமங்களைச் சொல்லுங்கோள்; அவ்வளவே போராது; ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாதரேணுவையுங் கொண்டு ரக்ஷையிடுங்கோள்; உடனே நோய் தீருமாறு காணுங்கோள் என்றாளாயிற்று.

கடாக்களிறு—மதயானை; கவளமென்று யானையின் உணவுக்குப்பெயர். கபளமென்ற வடசொல்விகாரம். தீனிகளையிட்டு மதமூட்டப்பட்ட யானை என்றபடி. கண்ணன் திருநாமத்தைச் சொன்னால் குவளைத்தடங்கண்களின் பயப்புத்தீரும்; தவளப்பொடிக்கொண்டு இட்டால் கோவைச்செவ்வாயின் பயப் புத்தீரும் என்றதாகக்கொள்க.

தவள என்ற வடசொல் தவளமெனத்திரிந்தது. பரிசுத்தமான என்றபடி. இங்கு இன்னபொடியென்று சொல்லிற்றில்லையாகிலும் ஸ்ரீவைஷ்ணவர்களின் திருவடித்தூள் என்னும்பொருளே ஆழ்வார்க்கு விவக்ஷிதமென்னுமிடம் மேற்பாட்டில் "மாயன்தமரடிநீறுகோண்டு" என்றதனாலும் அறுதியிடத்தக்கது. திருமங்கையாழ்வாரும் சிறிய திருமடலில் "சீரார் செழும்புழுதிக்காப்பிட்டு" என்றருளிச்செய்தார். புழுதியென்றால் தெருப்புழுதி; செழும்புழுதியென்றால் எம்பெருமானுடைய திருவடிப்பொடி; சீரார்செழும்புழுதியென்றால் பாகவதர்களின் திருவடிப்பொடி.

இனி, தெய்வத்தண்ணந்துழாய்த்தாராயினும் தழையாயினும் தண் கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்றமண்ணாயினுங்கொண்டு வீசுமினே" என்கிற திருவிருத்தப் பாசுரத்தின்படி. திருத்துழாய் மண்பொடியைக் கூறினதாகவும் கொள்வர்சிலர். .... (ரு)

தணியும்பொழுதில்லை நீரணங்காடுதிரன்னைமீர்! *
பிணியுமொழிகின்றதில்லை பெருகுமிதுவல்லால் *
மணியினணிநிறமாயன் தமரடிநீறுகொண்டு *
அணியமுயலில் மற்றில்லைகண்டீரிவ்வணங்குக்கே. (சா)

அன்னைமீர்	தாய்மார்களே!	இ அணங்குக்கு	இப்பெண்பிள்ளைக்கு
தணியும் பொழுது இன்றி	சிறிதும் ஓய்வு இல்லாமல்	மணியில் அணி நிறம்	நீலமணியிற் காட்டிலும் அழகிய நிறம்படைத்த
நீர் அணங்கு ஆடுதிர்	நீங்கள் வெறியாடுதலைச் செய்வியாநின்றீர்கள்; (இவ்வெறியாடலினால்)	மாயன்	எம்பெருமானுடைய
பிணியும் ஒழிகின்றது இல்லை	நோயோ தீர்கின்றதில்லை;	தமர்	பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களினுடைய
இது அல்லால்	நோய்தீராத மாத்திரமேயன்றிக்கே	அடி நீறு கொண்டு	பாததூளியைக் கொண்டுவந்து
பெருகும்	மேன்மேலும் வ்ருத்தியுமடைந்து வருகின்றது;	அணிய முயலில்	இடுவதற்கு முயற்சிசெய்தால்
		மற்று இல்லை கண்டீர்	(இத்தோடொத்த பரிஹாரம்) வேறெதுவுமில்லைகிடீர்.

* * * [தணியும்பொழுதில்லே.] கீழ்ப்பாட்டில் "தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின்தணியுமே" என்று கூறின தோழியை நோக்கித் தாய்மார் "நீ சொல்லுகிறபொடி இன்னதென்று தெரியவில்லையே!; விளங்கச்சொன்னால் நலம்" என்ன; அதனை விளங்கவுரைக்கின்றாளிப்பாட்டில்.

அந்தோ! சிறுபிள்ளைகள்போலே நீங்கள் செய்கின்றீர்களே!; (அதாவது) ஏதாவதொரு காரியத்தைச் சிறுபிள்ளைகள் செய்யாநின்றால் அதில் தகுதியின்மை கண்டு பெரியார் மறுத்தால், அப்பிள்ளைகள் அக்காரியத்தையே மேன்மேலும் பிடிவாதமாய் வலிந்து செய்துபோருவது வழக்கம்; அப்படியே நீங்களும் நான் மறுப்பதே ஹேதுவாகப் பிடிவாதங்கொண்டு வெறியாட்டந்தன்னையே விடாது செய்விக்கின்றீர்களே!; இதனால் பிணி ஒழியாததோடு பெருகிச்செல்லவுங்காணு கின்றோமே! என்கிறாள் முன்னடிகளில்.

நீலமணிவண்ணனை எம்பெருமானுடைய வடிவழகிலீடுபாடுகொண்ட பரமபாகவதர்களின் ஸ்ரீபாததூளியைக்கொண்டுவந்து.... என்று இவள்சொல்லத் தொடங்கும்போதே தாய்மார்கள் 'இவ்வரும் பெரும்பொருள் நமக்குக்கிடைக்க வழி ஏது? மிகவும் துர்லபமான வஸ்துவைச் சொல்லுகின்றாயே!, இது ஸம்பாதிப்பது கஷ்டமாயிற்றே!' என்று சொல்ல; அன்னைமீர்! மாயன்தமரடி நீறுதன்னைக் கொண்டுவரவேண்டா; 'அதைக்கொண்டுவரவேணும்; இவளுக்கு அதையிட வேணும்' என்று மநோரதித்தாலும் போதும்; அவ்வளவிலேயே நோய் தீர்ந்த தாகும், பாருங்கோள் என்கிறாள்.

மநோரதமாத்திரமே பலன் அளிக்கவல்லதோ? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக ஈட்டில் "ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்- ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்" என்கிற ச்லோகத்தை யெடுத்துக்காட்டித் தெளிவு பிறப்பிக்கப்பட்டது. இது, ப்ரபத்தியின் அங்கங்களைக் காட்டுகிறவொரு பாஞ்சராத்ரப்ரமாணம். இதில் ஆநுகூல்யத்தைப் பற்றின எண்ணம் போதுமென்றும், ப்ராதிகூல்யத்திலோவென்னில், அதை விடுவோமென்கிற எண்ணம் போராது, விட்டேதீரவேணும் என்றும் சொல்லிற்று. இதுபோலவே இங்கு மாயன்தமரடி நீறுகொண்டு இடவேணுமென்கிற முயற்சியளவே போதுமென்றும், பரிஹாரமாகச் செய்துபோருகிற நிஹீநக்ருத்யங்களை விடுவோமென்று எண்ணினால் மாத்திரம் போராது, கடுக விட்டே தீர வேணுமென்றும் தெரிவித்தவாறு.

இங்கே ஸ்ரீவைஷ்ணவ பாததூளியின் ப்ரபாவபரமாக ஒரு ஐதிஹ்ய மருளிச்செய்வர். அகளங்க நாட்டாழ்வான் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களோடே ஓரிடத்திற்குச் செல்லுகையில் வழியிடையே ஒரு ஜைனக்கோவில் தென்பட்டது; அப்போது இராக்காலமாயுமிருந்தது. அக்கோவில்வாசலில் சிங்கப்பதுமை யிருப்பதைக்காட்டி அவ்வாழ்வான் 'பகவத்ஸந்நிதி' ஸேவியுங்கள் என்று வேடிக்கையாகச்சொல்ல, அவர்களும் மெய்யென்றேயெண்ணி ஸேவித்த பிறகு இது ஜைநக்கோவில் என்றறிந்தவாறே மோஹித்து விழுந்தார்களாம்: அப்

போது அருகேயிருந்த பிள்ளையுறங்காவில்லிதாஸர் தம்முடைய ஸ்ரீபாததூளியை அவர்களுக்கு இட, மோஹம் தெளிந்து எழுந்தார்களாம். .... (சு)

அணங்குக்கருமருந்தென்று அங்கோராடும்கள்ளும்பராய் *
சுணங்கையெறிந்து நும்தோள்குலைக்கப்படுமன்னைமீர் ? *
உணங்கல்கெடக் கழுதையுதடாட்டம்கண்டென்பயன் ? *
வணங்கீர்கள்மாயப்பிரான்தமர் வேதம்வல்லாரையே. (எ)

அணங்குக்கு அரு மருந்து என்று	இப்பெண்பிள்ளைக்கு அருமையான மருந்தென்றுசொல்லி	உணங்கல்கெட	உலர்த்தின நெல் பாழாய்ப்போக
அங்கு ஓர்ஆடும் கள்ளும் பராய்	தேவதாந்தரத்திற்கு ஆடறுக்கவும் கள்நிவேதனம் செய்யவும் பாரித்து	கழுதை உதடு ஆட்டம் கண்டு என் பயன்	(அதனை மேய்கிற கழுதையின் உதடு அசைகின்ற அழகைக் கண்டுகொண்டிருப்பதனால் ஒரு பயனுண்டோ?
சுணங்கை எறிந்து	ஒருவகைக் கூத்தாடுதலையும் செய்வித்துக்கொண்டு	மாயன் பிரான்	ஆச்சரிய சக்தியையுடையனை எம்பெருமானுடைய
நும் தோள் குலைக்க படும் அன்னைமீர்	தோள்கள் துடிக்கக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற தாய்மார்களே! (இந்தக் கூத்தாடுதலைக் கண்டுகொண்டிருப்பதும் ஒரு வேடிக்கையோ?)	தமர்	பக்தர்களான
		வேதம் வல்லாரை	வைதிகர்களை
		வணங்கீர்கள்	வணங்குங்கள்.

* * * [அணங்குக்கு.] இவளது நோய்க்குப் பரிஹாரமாக தேவதாந்தர பஜனம் பண்ணினால் இவளுக்கு இழவேயாம்; இவள் பிழைக்கவேணுமென்றிருந்தீர்களாகில் ஸ்ரீவைஷ்ணவர்களைப்பணிவதே பாங்கு என்கிறாள். ஆடு அறுக்கவும் மது நிவேதனம் பண்ணவும் பாரிக்கின்ற பரிஹாரமுறையை வாய்விட்டு நிந்திக்கின்றாள்.

பராய் என்றது பராவியென்றபடி. பராவுதலாவது பாரித்தல். ஒன்பதினாயிரப்படி, இருபத்தினாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி, பன்னீராயிரப்படி ஆகியநான்கு வியாக்கியானங்களிலும் இவ்விடத்தில் ஏகரூபமாகவே ஒரு அச்சுப்பிழை புகுந்துள்ளது; அதாவது, "பராவி—பாரித்து" என்றிருக்கவேண்டுவது 'ப்ரார்த்தித்து' என்றே விழுந்திட்டது. இங்கு அதுவன்று பொருள்: திருத்திக் கொள்க.

இரண்டாமடியில் "சுணங்கை—எறிந்து" என்றும் "சுணம்—கையெறிந்து" என்றும் கொண்டு பொருள் கூறுவர். சுணங்கையென்பது சுணங்கைக்கூத்தைச் சொன்னபடி; அதாவது கைகொட்டி ஆடுவதொருகூத்து; தேவதாந்தரஸமாராதனமாகச்செய்யும் செய்கைகளிலே இந்தக் கூத்தாட்டமும் ஒன்றாகக் கொள்ளத்தக்கது. "துணங்கை யென்று பாடமாய் துணங்கையென்ற கூத்தாகவுமாம்" என்பர் பன்னீராயிரவுரைகாரர். சுணம், கையெறிந்து என்று பிரிக்குமளவில், சூர்ணமென்னும் வடசொல் சுண்ணமென்றாகி, அது சுணம்

என்று தொக்கிக்கிடப்பதாகக்கொண்டு மஞ்சட்பொடியென்று பொருள்கொள்க. மஞ்சள்பொடியை ஒருவர்மேலே ஒருவரெறிந்து ஆடுவதென்பர். **நும் தோள் குலேக்கப் படும் அன்னேமீர்!**=வெறியாடுகிற காலத்தில் தோள்கள் அசைத்தாடப் படுவதுண்டே, அதனைக்கூறியவாறு. அன்னையருடைய தோள்களுக்கு ஒரு வியாபாரமுமில்லையே; அப்படியிருக்க "நும்தோள் குலேக்க' என்று சொல்லிற்று என்னெனின்; ப்ரயோஜகர்த்தாக்களிடம் காணப்படும் செயலை ப்ரயோஜக கர்த்தாக்களிடத்திலும் ஏறிட்டுச் சொல்லுவதுண்டாதலால் அந்த முறையிற் சொன்னபடி.

இவ்விடத்தில் ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;—"பகவத்விஷயத்தில் பண்ணின அஞ்ஜலிமாத்ரமும் சரண்யன் நீர்மையாலே மிகை என்றிருக்கக்கடவ நீங்கள் படும் எளிவரவேயிது." என்பதாம். ஆயாஸரூபமான காரியங்களைச் செய்யப் பொறாத பகவத்விஷயத்திலே வாஸனை பண்ணிப்போருகின்ற நீங்கள் இப்படிப் பட்ட ஆயாஸகருமங்களை ஏறிட்டுக்கொள்வதே! என்று வெறுக்கிறபடி.

தோழி இங்ஙனே சொல்லச் செய்தேயும், வெறியாடுகிறவது ஒரு வேடிக்கையான காரியமாக இருப்பதனால் தாய்மார்கள் அதைப்பார்த்து அதிசயப்பட்டுக்கொண்டிருக்க, அந்தோ! இதென்ன வேடிக்கைபார்த்தல்!; நம்முடைய சரக்கு நஷ்டமாகிறபடியை அறிந்துகொள்ளாமல் இங்ஙனே வேடிக்கை பார்த்திருப்பது தகுதியோ என்று உபேக்ஷிக்க நினைத்த தோழி ஒரு லோகோக்தியை யெடுத்துக்காட்டுகின்றாள். [உணங்கல் கெடக் கழுதையுதடாட்டம் கண்டு என்பயன்?] தெருவிலே உலர்த்தப்படுகிற நெல்முதலானவை உணங்கல் எனப்படும்: அதைக்கழுதைமேய்ந்து விடுவது உண்டு; அது மேயும்போது உதடு அசைகிற அதிசயமானது வேடிக்கைபார்க்கிறவர்களுக்கு விரும்பிக் காணத்தக்க தாகவேயிருக்கும்; ஆனாலும், நெல் நஷ்டமாவதைக்கண்டு அக்கழுதையை அடித்துத்துரத்தவேண்டியதாயிருக்க, அது செய்யாதே உதடாடுகிற அதிசயத்தைக் கண்டுகொண்டிருப்போமென்று பார்த்துக்கொண்டிருந்தார்களாகில் அன்னவருடைய விவேகத்தை என் சொல்லுவோம்! அவ்வண்ணமாகவன்றோ உங்களுடைய அவிவேகமிருப்பது என்றவாறு.

இங்கே ஈடு—"ஜீவநஸாதனமான வ்ரீஹியானது நசித்துப்போம்படிக்கிடாக அத்தைத்தின்கிற கழுதையினுடைய உதட்டின் வ்யாபாரம் கண்டிருந்தால் என்ன ப்ரயோஜநமுண்டு? அப்படியே, இவளைக்கொண்டு ஜீவிக்கவிருக்கிற நீங்கள் இவள் விநாசத்தை ஸூசிப்பிப்பதான தேவதாந்தரஸ்பர்சமுடையார் வ்யாபாரம் கண்டிருக்கிறவித்தால் என்ன ப்ரயோஜநமுண்டு? ப்ரயோஜநமில்லாமையேயன்று, விநாசமேயாயிற்று பலிப்பது." என்பதாம்.

ஐயன் திருக்குருகைப்பெருமாளரையர் என்கிற வொருஸ்வாமி மற்றொரு வகையாகவும் மூன்றுமடியை நிர்வஹிப்பராம்; அதாவது, **உணங்கல் கெட**=இப்பெண்பிள்ளையினுடைய இளைப்பு தீருவதற்காக, **கழுதை**—பேயினுடைய, **உதடாட்டம் கண்டு என்பயன்?**= நீங்கள் ஆடுங்களும் பாரித்துக்கொடுக்க

அத்தை அது விநியோகம் கொள்ளும்போது அதனுடைய உதடு ஆடுமே; அதைக் கண்டு கொண்டிருப்பதனால் என்ன பயனுண்டு? என்பதாம். கழுது என்று பேய்க்குப் பெயர். "காலார் மருதும் காய்சினத்தகழுதும்" என்றும் "வஞ்சப்பகுவாய்க் கழுதுக்கு இரங்காது" என்றும் திருமங்கையாழ்வாரும் பிரயோகித்தருளினர். கழுதை என்றது கழுதினுடைய என்றபடி. வேலன் ஆராதிக்கிற தேவதாந்தரத்தை இங்குக் கழுதாகச் சொன்னபடி.

அடைவுபடச் செய்யவேண்டிய பரிஹாரமுறையை உணர்த்துவது ஈற்றடி: வேதம்வல்லவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களை வணங்குவதே இதற்குப் பரிஹாரமென்று உணர்த்தியபடி. "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:"— ஸகலவேதங்களுக்கும் பொருள்நானே என்று கீதையில் அவன்தானே யருளிச் செய்தபடியும், "ஸ ப்ரஹ்மா| ஸ ஹரா நாந்யா தேவதா:" என்று உபநிஷத்துதானே ஓதினபடியும் இதரதெய்வங்களுக்குத் தனித்து ஒரு சக்தியில்லையென்றும், "இறுக்குமிறை யிறுத்துண்ண எவ்வுலகுக்குந்தன் மூர்த்தி, நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே" என்கிறபடியே ஸ்ரீமந்நாராயணனே இவற்றுக்கு உயிர்நிலையென்றும் உணர்ந்த பரமைகாந்திகளை வணங்குங்கோள் என்றதாயிற்று. .... (எ)

வேதம்வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான்திருப்
பாதம்பணிந்து * இவள்நோயிது தீர்த்துக்கொள்ளாதுபோய் *
ஏதம்பறைந்தல்லசெய்து கள்ளூடுகலாய்த்தூய் *
கீதமுழவிட்டு நீரணங்காடுதல்கீழ்மையே. (அ)

(அன்னேமீர்)	தாய்மார்களே!	ஏதம் பறைந்து	இழிவான பேச்சுக்களைப் பேசி
வேதம்வல்லார் களை கொண்டு	வைதிகர்களான ஸ்ரீவைஷ்ணவர்களைப் புருஷகாரமாகக்கொண்டு	அல்ல செய்து	ஸ்வரூபத்திற்குத் தகாத காரியங்களைச்செய்து
விண்ணோர் பெருமான்	நித்ய ஸூரிநாதனான எம்பெருமானுடைய	ஊடு	நடுநடுவே
திரு பாதம்	திருவடிகளை	கள் கலாய் தூய்	கள்ளைக் கலந்துதூவி
பணிந்து	ஆச்ரயித்து	கீதம் முழவு இட்டு	வாத்ய கோஷங்களைப் பண்ணி
இவள் நோய் இது	இவளுடைய இந்த நோயை	நீர் அணங்கு ஆடுதல்	நீங்கள் வெறியாடுவிக்கின்றவிது
தீர்த்துக்கொள்ளாதுபோய்	போக்கிக்கொள்ளாமல்	கீழ்மையே	(இக்குடிக்கு) அவத்யமேயாம்.

* * * [வேதம்வல்லார்களை.] வேதவித்துக்களான ஸ்ரீவைஷ்ணவர்களைப் புருஷகாரமாகக்கொண்டு எம்பெருமான் திருவடிகளைப் பணிந்து இவளுடைய நோயைத்தீர்த்துக்கொள்ளாதே அற்பதெய்வங்களைப்பணிதல் உங்களுக்குக் கீழ்மையென்கிறாள்.

இதில் முதலடியில், சிறந்த சாஸ்த்ரார்த்தமொன்று வெளியிடப்படுகிறது; யானையின்மீது ஏறவிரும்புமவர்கள் யானைப்பாகனுடைய அநுமதி

கொண்டு புகவேண்டும்போலே ஸ்ரீவைஷ்ணவர்களைப் புரஸ்கரித்துக்கொண்டே எம்பெருமானைப்பணிதல் வேண்டுமென்பது ஸத்ஸம்ப்ரதாயம். *வாஸிஷ்ட [illegible] ஹவிஸ்=பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத், ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யவாந்பவேத்.'' என்கிற பிரமாணமும், இதை யடியொற்றி நடாதூரம்மாளருளிச்செய்த ''[illegible] ஸ்ரீமந் [illegible]—ஸத்ஸங்காத் பவநிஸ்ஸ்ப்ருஹோ குருமுகாத் ஸ்ரீசம் ப்ரபத்யாத்மவாந்'' என்பதும் இங்கே அறியத்தக்கன. இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தில் இவ்வர்த்தம் அநுஷ்டாநசேஷமாகக் கண்டது: ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸ்ரீராமஸந்நிதானத்திலே புகும்போது அப்பெருமானுடைய வாத்ஸல்ய ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களைத் தான் நன்கு அறிந்தவனாகையாலே நேரே அவன் திருவடிகளிலேயே வந்து விழலாமாயிருந்தும் அங்ஙனம் செய்யாதே *ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்'' என்று வாநர முதலிகளைப்பணிந்து தொடங்கிற்றெல்லாம் இந்த சாஸ்த்ரார்த்த முறையைப் பின்பற்றியேயாம். ஸுக்ரீவ மஹாராஜரும் திருவடியை [மாருதியை] முன்னிட்டே பெருமாளைப்பற்றினர்.

கீழ்ப்பாட்டில் ''வணங்கீர்கள் மாயப்பிரான் தமர் வேதம் வல்லாரையே'' என்று ஸ்ரீவைஷ்ணவர்களையே உத்தேச்யராகக்கொள்ளும்படி சொல்லிவைத்து, இப்பாட்டில் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை த்வாரமாகக்கொண்டு பகவதாச்ரயணம் பண்ணும்படி சொல்லுவானேன் ? என்னில் ; இங்கு நம்பிள்ளை அருளிச்செய்யும்படி: ஸ்ரீவைஷ்ணவர்களே ஆச்ரயணீயர்; அவர்களுக்கு மேற்பட எம்பெருமானளவிலே சென்று ஆச்ரயிக்கவேண்டியதில்லைதான்; ஆனாலும் ஸஜாதீயர்களிடத்திலே ருசிவிச்வாஸங்கள் கனக்க உண்டாவது அரிதாகையாலே அவர்களைப் பரமசேஷிகளாகக்கொள்ள இசைவு உண்டாகா தொழியினும் அவர்களைப் புருஷகாரமாகவாகிலும் கொள்ளப் பாருங்கோளென்று சொல்லுகிறதென்று.

இவள்நோய் இது = இவள் என்றது பகவத் விஷயமான நோய் தவிர மற்றொரு நோய் வந்துபுகுர ப்ரஸக்தியற்றவள் என்று காட்டினபடி. நோய் இது என்றது—* வானோர் தலைமகனாம் சீராயின தெய்வநன்னோய் இது என்றபடி.

ஏதம் பறைந்து=வெறியாடுகிற வேலன் வாயாற் சொல்லுகிற வார்த்தைகளெல்லாம் அநுவதிக்கவும் தகாதாகையாலே ஏதமென்று பொதுவிலே சொன்னபடி. அவன் செய்கிற காரியங்களும் அப்படியே மிகவும் ஆபாஸங்களாகையாலே அல்லசெய்து எனப்பட்டது ; ஸ்வரூபாநுரூபமல்லாதவற்றைச் செய்து என்றபடி. அதை விவரிக்கிறது—கள் ஊடு கலாய்த் தூய் என்றும் கீதமுழவிட்டு அணங்காடேல் என்றும்.

நிஹீநத்ரவ்யங்களைக் கலந்து தூவி, பொல்லாத பாட்டோடுங்கூடின வாத்யங்களை ப்ரவர்த்திப்பித்து நீங்கள் தைவாவேசத்தாலே ஆடுகிறவிது இக்குடிக்கே இழுக்கு என்றதாயிற்று. (அ)

கீழ்மையினாலங்கோர் கீழ்மகனிட்டமுழவின்கீழ் *
நாழ்மைபலசொல்லி நீரணங்காடும்பொய்காண்கிலேன் *
ஏழ்மைப்பிறப்புக்கும்சேமம் இந்நோய்க்குமீதேமருந்து *
ஊழ்மையில்கண்ணபிரான் கழல்வாழ்த்துமினுன்னித்தே. (கூ)

(அன்னைமீர்)	தாய்மார்களே !	ஊழ்மையின்	முறைப்படியே
கீழ்மையினால்	உங்கள் நீசத்தனத்தினால்	கண்ணபிரான்	க்ருஷ்ணபகவானுடைய
அங்கு ஓர் கீழ் மகன் இட்ட முழவின் கீழ்	நீசனான சண்டாளனொருவன் நடத்திப்போரும் வாத்யகோஷத்தின் சார்பாக	கழல்	திருவடிகளை
		உன்னித்து	சிந்தித்து
		வாழ்த்துமின்	மங்களாசாஸனம் பண்ணுங்கள்;
பல நாழ்மை சொல்லி	தப்புவார்த்தைகள் பலவற்றையுஞ் சொல்லி	ஈதே	இந்த மங்களாசாஸநமே
நீர் அணங்கு ஆடும் பொய்	நீங்கள் வெறியாடுகின்றவிந்த வம்புவேலையை	ஏழ்மை பிறப்புக்கும்	ஏழேழ் பிறவிக்கும்
காண்கிலேன்	நான் கண்கொண்டு காண மாட்டேன்;	சேமம்	க்ஷேமகரம்;
(க்ரமமாகச் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால்)		இ நோய்க்கும்	இந்த நோய் தீருவதற்கும்
		ஈதே மருந்து	இதுதான் மருந்து.

* * * [கீழ்மையினால்.] நீங்கள் அணங்காடுவதை நான் கண்கொண்டு காணமாட்டேன்; இவள் பிழைக்கவேணுமென்றிருந்தீர்களாகில் கண்ணபிரானுடைய திருவடிகளை நினைத்துவாழ்த்துங்கோள் என்கிறாள். ஒரு சண்டாளன் ஏதோ வாத்யம் முழங்குவதாம்; அவ்விடத்தைச் சுற்றிப் பலர் இருந்துகொண்டு தேவதாந்தரங்களின்மேலே சில கட்டுக்கதைகளைச் சொல்லிப்பாடுவதாம்; இதனிடையே வேலன் தலை விரித்தாடுவதாம்; ஆகவிப்படி நீங்கள் செய்து போருகிற தப்புக்காரியங்களை என்கண்ணால்பார்க்க ஸஹிக்கின்றிலேன் என்கிறாள் முன்னடிகளில்.

ரஜோகுணத்திற்கும் தமோகுணத்திற்கும் வசப்பட்டிருக்குந்தன்மையை இங்குக் கீழ்மை என்கிறது. நாழ்மைபல சொல்லுவதாவது—அவற்றுக்கு இல்லாத ஏற்றங்கள் பலவும் சொல்லுகை. நாழ்—அவத்யம்.

இப்பரிஹாரமுறைகளைத் தவிர்ந்து கண்ணபிரானது கழல்வாழ்த்துவதே எற்றைக்கு மேழேழ்பிறவிக்கும் நன்மைபயக்குமென்கிறது பின்னடிகளில். ஏழ்பிறப்பென்றது—காலமுள்ளதனையும் என்றபடி. சேமம்—க்ஷேமம். ஊழ்மையின்—முறைப்படியே என்றபடி.

இந்நோய்க்குமீதே மருந்து என்பதற்குமுன்னே ஈட்டில் ‘சம்பறுத்து ஆர்க்கைக்குப்போக வேணுமோ?”. என்றொருவாக்கியம் காண்கிறது. இதன் பொருளாவது—நெல்முதலிய அறுத்தால் அதை ஒரு கட்டாகக்கட்டுவதற்குக் கயிறு தேடப்போகவேணும்; சம்பு அறுத்தால் அதைக்கொண்டே அதைக் கட்டலாமாகையாலே வேறொரு கயிறு தேடப்போகவேண்டியதில்லை; அதுபோல இங்குக் கண்ணபிரான் கழல்வாழ்த்துவது தவிரவேறொருமருந்து தேடப்போகவேண்டாவென்கை. “சம்பறுத்தார் ஆர்க்கைக்குப்போகவேணுமோ?” என்றும் பாடாந்தரம் காண்கிறது. பொருளொன்றே. ஆர்க்கைக்கு—கட்டுவதற்கு. போகவேணுமோ—கயிறு தேடப்போகவேணுமோ?. .... (௯)

உன்னித்துமற்றொருதெய்வம்தொழாள் அவனையல்லால் *
நும்மிச்சைசொல்லி நம்தோள்குலைக்கப்படுமன்னைமீர் ! *
மன்னப்படுமறைவாணனை வண்துவராபதி
மன்னனை * ஏத்துமின் ஏத்துதலும்தொழுதாடுமே. (௧௦)

அவனை அல்லால்	எம்பெருமானைத் தவிர்த்து	தோள் குலைக்கப்படும் அன்னைமீர்	தோள் அசையநிற்கிற தாய்மார்களே!,
மற்று ஒரு தெய்வம்	வேறொரு தெய்வத்தை	மன்னப்படும் மறைவாணனை	நித்யமாக விளங்குகின்ற வேதங்களினால் பிரதிபாதிக்கப்படுகிறவனும்
உன்னித்து	ஒருவஸ்துவாக நினைத்து	வண் துவராபதி மன்னனை	அழகிய துவாரகாபுரிக்கு அதிபதியுமான எம்பெருமானை
தொழாள்	(இப்பெண்பிள்ளை) தொழுவது கிடையாது; (இப்படியிருக்க.)	ஏத்துமின்	துதியுங்கோள்;
நும்	உங்களுடைய	ஏத்துதலும்	துதித்தவுடனே
இச்சை	மனம் போனபடியே	தொழுது	(இப்பெண்பிள்ளை உணர்த்தி பெற்று, அவனைத்) தொழுது
சொல்லி	(நான் அநுவாதம் செய்யவும் தகாதசொற்களைச்) சொல்லி	ஆடும்	களித்துக் கூத்தாடுவாள்.
நும்	உங்களுடைய		

* * * [உன்னித்து.] இப்பராங்குச நாயகிக்குக் கண்ணபிரான் பக்கலிலுள்ள அளவுகடந்த ப்ராவண்யத்தைபறிந்து நீங்கள் அதற்குத் தகுதியாக நடந்துகொள்வதே யுக்தமென்கிறாள் தோழி.

“இன்னார்க்கு இன்ன பரிஹாரமென்றில்லையோ? அது அறிந்து பரிஹரிக்க வேண்டாவோ? முழங்கால் தகர, மூக்கிலே ஈரச்சீலை கட்டுமாபோலேயன்றோ நீங்கள் பண்ணுகிற பரிஹாரம்.” என்பது நம்பிள்ளையீடு. ஒருவனுக்கு முழங்காலிலே காயம்பட்டால் முழங்காலிலேயன்றோ சிகித்ஸை செய்யவேண்டுவது; அதைவிட்டு, முழங்கால் பாதையின் நிவ்ருத்திக்காக மூக்கிலே சிகித்ஸை செய்வதுண்டோ? இது ரோகத்திற்குத்தகுந்த பரிஹாரமாகுமோ? என்கை.

“[illegible]—
அக்ஷிரோகே ஸமுத்பந்நே கர்ணம் சித்வா குதம் தஹேத்.” என்றொரு சுலோகமுண்டு: கண்ணில் ரோகமுண்டானால் காதையறுத்து ப்ருஷ்டபாகத்தில் சூடு போடவேண்டியதென்று இதன்பொருள். மிருக சிகித்ஸை கூறுமிடத்திலே உள்ளதான இந்தச்லோகத்தை ஒருவன் கண்டு இந்த சிகித்ஸையைக் கண்ரோகியானவொரு மனிதனுக்குச் செய்தானாம். அதுபோலவன்றோ இவர்கள் செய்து போருகிற பரிஹாரமுறையிருப்பது என்று ஏசுகிறபடி.

அவனையல்லால் மற்றொரு தெய்வம் உன்னித்துத் தொழாள்—இப்பெண்பிள்ளை ஒருகாலத்திலும் தேவதாந்தர பஜனம் பண்ணியறியாள். உன்னித்து என்றது தன்னெஞ்சாலே மதித்து என்றபடி; ஒரு பொருளாகக் கொண்டு தொழாள் என்கை. “பிறைதொழும் பருவத்திலும் பிறைதொழுதறியாள்” என்பர் நம்பிள்ளை. அர்புலிப் பருவத்தில் பிறை தொழுவது மனிசர் யாவர்க்கும் இயல்பாக நிகழ்வது; அதுதானும் இவட்கு நிகழ்ந்ததில்லை யென்கிறவிது மிக்க பொருத்தமானது. “முலையோ முழுமுற்றும் போந்தில மொய்பூங்குழல் குறிய கலையோவரையில்லை நாவோ குழறும், கடல் மண்ணெல்லாம் விலையோவெனமிளிருங்கண் இவள்பரமே! பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே.” என்ற திருவிருத்தமும் இங்கு நினைக்கத்தக்கது. “அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து” என்னும்படியிருக்கிற ஆழ்வார்க்கு தேவதாந்தரஸ்பர்ஸம் ஒருகாலத்திலும் புகுவதற்கு ப்ரஸக்தியில்லையே.

நும் இச்சை சொல்லி= உங்கள் மனம் போனபடியே சிலவற்றைச் சொல்லி என்றபடி. நீங்கள் சொல்லுகிற சொற்கள் இவளுடைய தன்மைக்குச் சிறிதும் சேராது; தோற்றினபடி ஏதேனும் சொல்லிப் போருகிற உங்கள் தன்மைக்குச சேருமத்தனை யென்று காட்டினபடி. [நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர் !] “தோள் அவனையல்லால் தொழா” என்கிற குடியிலே பிறந்து வைத்து உங்களுடைய தோளுக்கு இப்படியும் ஒரு துர்க்கதி யுண்டாவதே! என்று பொடிகிறபடி. தோள் குலைத்தலென்று வீணா ஆயாஸத்தைச் சொன்னவாறு; தொழுகையைச் சொல்லிற்றாகவுமாம். குலைதலாவது நிலைகெடுதல். தேவதாந்தர விஷயத்தில் பண்ணுகிற நமஸ்காரமாகையாலே தோள்நிலை கெடுதலாகக் கூறுகிறபடி. ஆவேசத்தாலே தோள் அசைத்தலைச் சொல்லுவதாகக் கொள்ளுதல் ஏற்கும்.

ஒழுங்குபடச் செய்யவேண்டிய பரிஹார முறையை உணர்த்துவன பின்னடிகள். வேதாந்த விழுப்பொருளான வண்துவராபதி மன்னனுடைய திருநாமத்தைச் சொல்லி யேத்துதல். செய்யவே இந்நோய் தீருமென்றுளாயிற்று. ஏத்துதலும்—ஏத்தினவுடனே, தொழுது ஆடும்—இப்பெண்பிள்ளை உஜ்ஜீவனம் பெற்றுவிடுவள் என்றபடி. ஆடும் என்பதை ஏவற்பன்மை வினைமுற்றாகக் கொண்டு, நீங்கள் தொழுதாடுங்கோள் என்றதாகவுமுரைக்கலாம். நன்னூல்

வினையியலில் "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில், செல்லாதாகும் செய்யுமென் முற்றே" என்ற சிறப்பு விதிக்கு மாறாக ஆடும் என்ற செய்யுமென் முற்றுக்கு முன்னிலைப் பொருள் கொள்ளலாமோ வென்னில், இதனைப் புதியன புகுதலாகக் கொள்க. "நீர் உண்ணும் என முன்னிலையிற் பன்மை யேவலாய் வருதல் புகுதியன புகுதல்" என்று நன்னூலுரைகாரர்களும் சொல்லிவைத்தார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற நன்னூற் சூத்திரமுங் காண்க.

த்வாரவதீ என்னும் வடசொல் துவராபதி யெனத் திரிந்தது. தக்ஷிண த்வாரகையாகக் கொண்டாடப்படும் ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதியில் இப்பாசுரம் மிக்க சிறப்புப் பெற்றுவரும். .... (க௦)

தொழுதாடித்தூமணிவண்ணனுக்கு ஆட்செய்துநோய்தீர்ந்த *
வழுவாததொல்புகழ் வண்குருகூர்ச்சடகோபன் * சொல்
வழுவாதவாயிரத்துள் இவைபத்துவெறிகளும் *
தொழுதாடிப்பாடவல்லார் துக்கசீலமிலர்களே. (கக)

தொழுது ஆடி	வணங்குதலும் கூத்தாடுதலுஞ்செய்து	சடகோபன்	ஆழ்வார்
தூ மணி வண்ணனுக்கு	அழகிய நீலமணிபோன்ற நிறமுடையனான எம்பெருமானுக்கு	சொல்	அருளிச்செய்த
		வழுவாத	குறையற்றதான
		ஆயிரத்துள்	ஆயிரத்தினுள்ளே
ஆள் செய்து	அடிமைத்தொழில் செய்து	வெறிகள்	வெறிவிலக்கு விஷயமான
நோய் தீர்ந்த	நோய் தீரப்பெற்றவரும்,	இவை பத்தும்	இப்பதிகத்தை,
வழுவாத	அவத்யமடையாத	தொழுதும் ஆடி	தொழுவதும் ஆடுவதுமாய்க்கொண்டு
தொல் புகழ்	இயற்கையான புகழையுடையவரும்	பாட வல்லார்	பாடவல்லவர்கள்
வண் குருகூர்	அழகிய திருநகரிக்குத் தலைவருமான	துக்க சீலம் இலர்கள்	துக்கப்படுந்தன்மையில்லாதவராவர்.

* * * [தொழுதாடி.] இத்திருவாய்மொழியை அன்போடு அதிகரிக்குமவர்கள் எம்பெருமானைப் பிரிந்து படுகையாகிற துக்கமின்றிக்கே வாழப்பெறுவர்கள் என்று பயனுரைத்துத் தலைக்கட்டுகின்றார்.

"ஆட்செய்து நோய்தீர்ந்த" என்று வாசகமிருந்தாலும் 'உருபுபிரித்துக் கூட்டுதல்' என்கிற முறைமையின்கீழ் "நோய்தீர்ந்து ஆட்செய்த" என்று பொருள்கொள்ளத்தகும். "நோய்தீர்ந்து தொழுதாடிப்பாடித் தூமணிவண்ணனுக்கு ஆட்செய்த வண்குருகூர்ச்சடகோபன்" என்பது ஆறுயிரப்படியருளிச் செயல். இனி, ஆட்செய்து என்பதை "சொல்திரியினும் பொருள் திரியா வினைக் குறை" என்ற நன்னூற்சூத்திரத்தின்படி எச்சத்திரிபாகக்கொண்டு 'ஆட்செய்ய' என்று பொருள் கொள்ளவுமாம். தோழியின் சொற்படியே தாய்மார்கள் தொழுதாடித்தூமணிவண்ணனுக்கு ஆட்செய்ய, அதனால் ஆழ்வார் நோய்தீர்ந்ததாகக் கூறியவாறு.

ஆழ்வாருக்கு இந்தநோய் தீருவதன்று; ஆத்மா உள்ளவரையில் அநுவர்த்திக்கு மத்தனை. ஆகையாலே நோய்தீர்ந்த என்று சொல்லுவதற்கு ப்ரஸக்தியில்லை; அப்படியிருக்க இங்கு 'நோய்தீர்ந்த' என்றது மோஹம் தெளிந்து சிறிது உணர்த்தியுண்டானமைபற்றி யென்க. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;— "தொழுதாடித் தூமணிவண்ணனுக்காட்செய்து நோய்தீர்ந்த" என்றதுக்கு அம்மங்கியம்மாள் பணிக்கும்படி—மோஹித்தவள் அல்பம் ஆச்வஸித்தவாறே மோர்க்குழம்பு குடித்தாள் தரித்தாள் கண்விழித்தாள் வார்த்தைசொன்னாள் என்பர்களிறே; அதுபோலே காணும்என்று."

எம்பெருமானோடு கலவிபெற்று நோய்தீர்ந்தாகச் சொல்லுகிறதன்று; மேல் திருவாய்மொழியில் * சாலவருந்தி, யிரவும்பகலும் மாறாமல் கூப்பிட்டிருந்தனாதலால் அங்ஙனம் சொல்லுவதற்கில்லை; பிறந்த உணர்த்தியைக்கொண்டு நோய்தீர்ந்ததாகச் சொன்னவத்தனை.

வழுவாத தொல்புகழ் வண்குருகூர்ச் சடகோபன்= இப்போது ஆழ்வார்க்கு வழுவாத புகழாவது தேவதாந்தர ஸம்பந்தத்தை ஈஷத்தும் ஸஹியாமையேயாம். "ஒருவன் வைஷ்ணவனாகையாவது இது" என்பர் நம்பிள்ளை.

மூன்றாமடியில் "இவைபத்து வெறிகளும்" என்பதை 'வெறிகள் இவைபத்தும்' என்று அந்வயித்துக்கொள்க: வெறிவிலக்கான இத்திருவாய்மொழியை என்றபடி. வெறிவிலக்காவது—நாயகவிரஹத்தாலே நாயகி மிகவும் வருந்திக்கிடக்க, அவளுடைய வடிவு வேறுபாட்டை நோக்கி 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ? என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறி கேட்க, அவளும் தன் மரபின்படி ஆராய்ந்து 'இவளுக்கு முருகக் கடவுள் ஆவேசித்ததொழிய வேறொன்றில்லை' என்றுகூற, அதுகேட்ட தாயார் உடனே வெறியாட்டாளனை யழைப்பித்து அவனைக்கொண்டு ஆவேசமாடுவிக்கவும், ஆடுறுப்பது கள்ளுகுப்பது பலியிடுவதாய்ப் பரிஹாரங்கள் செய்விக்கவும் முயல, அச்சமயத்தில் அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தையறிந்த தோழி அம்முயற்சிகளை விலக்குவதாம்.

ஆக இப்படிப்பட்ட வெறிவிலக்குத் துறையிலே அமைந்த இத்திருவாய்மொழியை ஸஹ்ருதயமாக அநுஸந்திக்க வல்லவர்கள் எம்பெருமானைப் பிரிந்து படுகிற துயரமும் அதற்குப் பரிஹாரமாக தேவதாந்தர ஸமாராதனம் பண்ணத் தேடுகையாகிற துயரமும் ஸம்பந்திக்கப்பெறாதே வாழ்வர்கள் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. .... (கக)

ஆறுந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

இச்சாஸாரத்யயோகாத் ப்ரஹரணநவநாத் ஸ்ரீதுலஸ்யாட்யமௌலே:
ஸ்துத்யாங்க்ர்யோ: பாததூள்யா ஸ்வஜநபஜந தத்பாததூளீநமோபி:।
தந்மூலஸ்வாங்க்ரிநுத்யா ததிதரபஜநத்யாகபூர்வோபஸத்த்யா
தேவம் ப்ராசிக்யபத் ஸ்வப்ரணயிஷு பிஷஜம் கேஸரஸ்ரக்விபூஷ:॥

கேஸரஸ்ரக்விபூஷ:— மகிழ்மாலைமார்பரான ஆழ்வார், தேவம்—எம்பெருமானை, ஸ்வப்ரணயிஷு—தனது பக்தர்கள் விஷயத்தில், பிஷஜம்—மருத்துவனை, ப்ராசிக்ய்பத்—வெளியிட்டருளினர். எந்த எந்த குணங்களையிட்டு? என்னில்;

1. இச்சாஸாரத்யயோகாத். * மாயப்போர்த் தேர்ப்பாகனார்க்கு. * பாரதப்போரில் பாண்டவர்களுக்கு ப்ரேமத்துடன் பண்ணின ஸாரதிக்ருத்யத்தைச் சொன்னபடி.

2. ப்ரஹரணநவநாத். * சங்குசக்கரமென்றிவள் கேட்க நீர் இசைக்கிற்றிராகில். * தன்னுடைய திவ்யாயுதங்களான திருவாழி திருச்சங்குகளின் புகழ்களை யிசைக்கவேணுமென்றதைச் சொன்னபடி.

3. ஸ்ரீதுலஸ்யாட்ய மௌலே: அங்க்ர்யோ: ஸ்துத்யா. * மதுவார் துழாய்முடி மாயப்பிரான் கழல் வாழ்த்தினால் * திருத்துழாயணிந்த திருமுடியையுடையனான எம்பெருமானுடைய திருவடிகளை வாழ்த்தவேணுமென்றதைச் சொன்னபடி.

4. கீழே ஸ்துத்யா என்றது—நாலாம்பாட்டில் * பெருந்தேவன் பேர் சொல்லகிற்கில் * என்று சொல்லுகிற திருநாமஸங்கீர்த்தனத்திற்கும் உபலக்ஷணமென்று திருவுள்ளம்.

5. பாததூள்யா. * தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின் தணியுமே * என்னப்பட்ட ஸ்ரீபாததூளியைச் சொன்னபடி.

6. 7. ஸ்வஜந பஜந தத்பாத தூளீ நமோபி:. எழாம்பாட்டில் * வணங்கீர்கள் மாயப்பிரான் தமர் வேதம் வல்லாரையே * என்றதில் திருவுள்ளமாக ஸ்வஜநபஜந என்றது. ஆறாம்பாட்டில் * மாயன் தமரடி நீறுகொண்டு அணிய முயலில் * என்றதில் திருவுள்ளமாக தத்பாததூளீ என்றது.

8. 9. தந்மூலஸ்வாங்க்ரிநுத்யா. எட்டாம் பாட்டில் * வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து * என்றதையும், ஒன்பதாம் பாட்டில் * ஊழ்மையிற் கண்ணபிரான் கழல் வாழ்த்துமின் * என்றதையும் சேரப்பிடித்து அருளிச்செய்தபடி.

10. ததிதர பஜநத்யாக பூர்வோபஸத்த்யா. * உன்னித்து மற்றொரு தெய்வந்தொழாள் அவனையல்லால் * என்றதைக் காட்டினபடி.

இப்படிப்பட்ட ஸித்தௌஷதங்களாலே வண்துவராபதி மன்னனே மருத்துவனாயிருந்துகொண்டு நோய் தீர்க்குமவனென்னுமிடத்தைத் தீர்ப்பாரையாமினியில் அருளிச்செய்தாரென்றதாயிற்று.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸ்வோத்தாவஸாதிந்யஸஹாவாதிஷ்டதாவத்யமுஷ்ய
ஸ்வாவேசக்ஷிதே ஸம்ஜிதி வ்யஸநாதிஸம்ஜே।
யே க்ஷுத்ரதைவத்வகத: பரிஹாரதந்த்ரகாரா:
தே வாரிதாஸ் ஸத்விதஜ்ஞாபிரேவ ஷஷ்டே॥

(கருத்து.) கீழ் * வீற்றிருந்தேழுலகுமென்ற திருவாய்மொழியில் கிடைத்த அநுபவமானது கனாக்கண்டது போலிருந்ததனால் ஆழ்வார் துயருற்று அறிவழிந்தவளவில் இதற்கு உள்ளபடி நிதானம் இன்னதென்றறியகில்லாத தாய்மார் க்ஷுத்ர தெய்வங்களைப்பற்றின வழிபாட்டினால் பரிஹாரம் செய்யமுயல, அப்போது தகுதியுணர்ந்த தோழிமார் நல்வார்த்தைகளைச்சொல்லி அந்த முயற்சியைத் தடை செய்தமை ஆறுந்திருவாய்மொழியில் சொல்லிற்றென்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

தீர்ப்பா ரிலாதமயல் தீரக் கலந்தமால்
ஓர்ப்பாது மின்றி யுடன்பிரிய—நேர்க்க
அறிவழிந் துற்றாரு மறக்கலங்கப் பேர்கேட்டு
அறிவுபெற்றான் மாறன் சீலம்.

தீர்ப்பார் இலாத	தீர்ப்பவர்கள் இல்லாத [ஒருவாரலும் தீர்க்க முடியாத]	உற்றாரும்	தாய்மார் முதலிய உறவினரும்
மயல் தீர.	பெரியகாதல் தீரும்படி	அற கலங்க	மிகவும் கலங்கி விபரீத ப்ரவ்ருத்திகள் பண்ண (அவ்வளவிலே)
கலந்த	(கீழ்த் திருவாய்மொழியில்) வந்துகூடின	மாறன்	ஆழ்வார்
மால்	எம்பெருமான்	பேர் கேட்டு	தோழிமார் சொன்ன திருநாமங்களை (யாத்ருச்சிகமாக) க்கேட்டு
ஓர்ப்பு ஆதும் இன்றி	(ஆழ்வாருடைய ப்ரக்ருதியைச்) சிறிதும் ஆராயாமல்	அறிவு பெற்றான்	மோஹம் தெளிந்து உணர்த்திபெற்றார்;
உடன் பிரிய	உடனே பிரிந்தவளவில்,	சீலம்!	இது ஆழ்வாருடைய குணமாயிருந்தது !
நேர்க்க	முன்னிலுங்காட்டில் விசேஷமாக		
அறிவு அழிந்து	சைதந்யம் அழிந்ததனால்		

* * * மண்ணையிருந்து துழாவியில் ஆழ்வார்க்கு உண்டான மயலானது எங்ஙனே தீரப்போகிறது! யாராலே தீரப்போகிறது! என்னும்படியாயிருந்தது; அப்படிப்பட்டமயல் தீரும்படியாக * வீற்றிருந்தேழுலகில் வந்து கலந்த ஸர்வேச்வரன் மீண்டும் பிரிந்தவளவிலே முன்னிலுங்காட்டில் அதிகமாக வ்யாமோஹம் தலையெடுத்தது; அப்போது தாய்மார் முதலான உறவினரும் யுக்தாயுக்த நிரூபணம்பண்ணமாட்டாதே கலங்கி ஏதேதோ வழிகளில் சில பரிஹார முறைமைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வளவில், ஆழ்வாருடைய ப்ரக்ருதியையறிந்த தோழியர் வந்து அந்தோ! குடிகெட்டதே! மறந்தும் புறந்தொழாதாரில் தலைவரான ஆழ்வார்க்கு இப்படியும் சில அதிப்ரவ்ருத்திகள் செய்வது தகுதியோ? பகவத் பாகவதபஜநமன்றோ செய்ய அடுப்பது என்று சொல்லிவரும்போது மாயப்போர்த் தேர்ப்பாகனார் என்றும் மதுவார்துழாய் முடி மாயப்பிரான் என்றும் உலகேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட பெருந்தேவன் என்றும் கவளக்கடாக்களிறட்டபிரான் என்றும் மணியிலணிநிறமாயன் என்றும் மாயப்பிரான் என்றும் விண்ணோர் பெருமான் என்றும் கண்ணபிரான் என்றும் வண்துவராபதிமன்னன் என்றும் சில திருநாமங்களைச் சொன்னபடியாலே அந்தத் திருநாமங்களைக்கேட்கப் பெற்றதனால் ஆழ்வார் மயக்கந்தெளிந்து அறிவுபெற்றார் என்றதாயிற்று. "நமனும் முற்கலனும் பேசநரகில் நின்றார்கள் கேட்க, நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி" என்ற திருமாலைப் பாசுரம் இங்கு ஒருபுடை ஸ்மரிக்கத்தக்கது.

இப்பாசுரத்தின் முடிவில் சீலம் என்றே பாடம் வழங்கிவருகின்றது. சீலன் என்றிருந்தபாடம் எப்போதோ இங்ஙனம் மாறிவிட்டதென்று அழகிய மணவாளச் சீயர் அருளிச்செய்யக்கேட்டிருக்கை. சீலன்—ஸதாசாரபரரான, மாறன்—ஆழ்வார் என்றபடி. "சீலன் மாறன் பேர்கேட்டு அறிவு பெற்றான்" என்று அந்வயம் காண்க. .... (36)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நான்காம்பத்து.

ஏழாந் திருவாய்மொழி—சீலமில்லாச் சிறியன்.

உரையவதாரிகை:—உலர்ந்து தரைப்பட்டுக்கிடந்த கொடியானது மழைத்துளிபட்டவாறே செழிப்புறுமாபோலே, கீழே மோஹித்துத் தரைப்பட்டிருந்த ஆழ்வார், தோழிமார் வாக்கில்நின்றும் வெளிவந்த சில திருநாமங்களைக் கேட்கப்பெற்ற ப்ரஸக்தியாலே உணர்த்தி பெற்றார். அத்தனையேயல்லது விரும்பினபடி எம்பெருமானோடே ஸம்ச்லேஷிக்கப்பெற்றிலர். மோஹித்திருந்த நிலைமைதானே நன்றாயிருந்தது. ஏனென்னில், அப்போது உணர்த்தியில்லாமையாலே துயரம் தெரியாது. உறக்கத்தில் பசிபொறுக்கலாம்; விழித்துக்கொண்டால் உண்டாலல்லது தரிக்கப்போகாதே. அப்படியே ஆழ்வாரும் மோஹித்திருந்த நிலைமையிலே ஒருவாறு ஆறியிருந்து உணர்த்தியுண்டான விப்போது துடிக்கவேண்டியவராயினார். துடித்துக்கூப்பிடுகிறார் இத்திருவாய்மொழியில்.

உலகத்திலே நோயாளிகள் மயக்க முற்றிருக்கும்போதுகளிலே பாதை தெரியாதேயிருந்து, மயக்கம் தெளிந்தவாறே பாடாற்றவொண்ணாமல் துடிப்பார்களே. அந்த நிலைமையேயாயிற்று ஆழ்வார்க்கு இப்போது.

அவனோ ஆபத்துக்கு உதவுமியல்வினன்; ஆபத்துக்கு நிதானமறிந்து பரிஹரிக்கவும் வல்லன்; பிரிந்தால் பொறுத்திருக்கவொண்ணாதபடியான அழகு படைத்தவன்; ஆபத்துக்களிலே விரோதியைப்போக்கி உதவுகைக்குப் போதுமான சக்திபடைத்தவன்; இப்படியிருந்தும் நம் ஆற்றாமைக்கு உதவவில்லையே, என்று கனத்த ஆர்த்தியோடே, கேட்டாரெல்லாரும் நீராய்க்கரையும்படி கூப்பிடுகிறார்.

சீலமில்லாச்சிறியனேலும் செய்வினையோபெரிதால் *
ஞாலமுண்டாய்! ஞானமூர்த்தீ! நாராயணா! என்றென்று *
காலந்தோறும்யானிருந்து கைதலைபூசலிட்டால் *
கோலமேனிகாணவாராய் கூவியும்கொள்ளாயே. (க)

சீலம் இல்லா	நன்மை யொன்றுமில்லாத	என்று என்று	என்றிப்படிப் பலகாலும் சொல்லி
சிறியன் எனும்	சிறியவனாயிருந்தேனாகிலும்	காலம் தோறும்	எல்லாக்காலத்திலும்
செய்வினையோ	செய்த பாபமோ	யான் இருந்து	நான் ஆசையோடிருந்து கொண்டு
பெரிது	பெரிதாயிருக்கின்றது ;	கை தலை பூசல் இட்டால்	கையைத் தலையிலே வைத்துக் கூப்பிட்டால்,
ஆல்	அந்தோ ! ;	கோலம் மேனி	அழகிய திருமேனியை
ஞாலம் உண்டாய்	(பிரளயத்தில்) உலகங்களை உண்டவனே !	காண	நான் ஸேவிக்குமாறு
ஞானம் மூர்த்தி	விலக்ஷண ஜ்ஞானத்தை வடிவாகவுடையவனே!	வாராய்	வருகிறாயில்லை ;
நாராயணா	நாராயணனே !	கூவியும் கொள்ளாய்	கூவிக்கொள்வதும் செய்கின்றிலை.

* * * [சீலமில்லாச்சிறியன்.] ஆழ்வார் சில ஞானிகளைச் சிறுமாமனிசர் என்று அருளிச்செய்வதுண்டு; வடிவு சிறுத்து ஞானம்பெருத்தவர்கள் என்கிற காரணத்தாலே அவர்களைச் சிறுமாமனிசரென்கிறது. இப்பாட்டின் முதலடியில் ஒருவிதத்திலே தம்மையும் சிறுமாமனிசராகச் சொல்லிக்கொள்கிறார் போலும். நற்குணமொன்றுமில்லாததனால் சிறியவன்; பண்ணின பாபங்களில் பெரியவன் என்கிறார். சீலமாவது நன்னடத்தை. அஃதில்லாமைபற்றித் தம்மை நீசராக அநுஸந்தித்துக்கொள்ளுகிறார். செய்வினையோ பெரிதால் என்றவிடத்திற்கு நம்பிள்ளையீடு;—"பண்ணின பாபத்தைப் பார்த்தவாறே சிதசிதீச்வரதத்வத்ரயத்தையும் விளாக்குலைகொள்ளும்படி பெருத்திருந்தது. ஸம்ஸாரிகளுடைய குற்றங்களைப்பொறுக்கு மீச்வரனுடைய குணங்களிலும், அவன்தந்த பக்திரூபாபந்நஜ்ஞானத்திலுங்காட்டில் பெரிதாயாயிற்றிருக்கிறது."

நல்லகாரியங்களைச் செய்யாமற்போனாலும் செய்யவேணுமென்று நெஞ்சினால் நினைத்தாலும் பலனுண்டு; தீய காரியங்கள் விஷயத்தில் அப்படியல்ல; தீயன செய்யவேணுமென்று நெஞ்சினால் நினைத்திருந்து அப்படியே செய்யாதொழிந்தால் குற்றமில்லை என்று நூற்கொள்கையுண்டு. நான் அப்படியல்லாமல் தீயன செய்து தலைக்கட்டினேனென்கிறார் செய்வினையோ என்பதனால்.

தாம் செய்த பாவங்கள் மிகப்பல என்பதை மேலே மூதலிக்கிறார். எம்பெருமானை நான் விரும்பினபடியே அநுபவிக்கப்பெறாமல் இழந்திருக்கின்றேனாதலால் செய்வினை பெரிதென்னுமிடத்தில் ஸந்தேஹமுண்டோவென்கிறார். அசோகவனத்தில் பிராட்டியும் "மமைவ துஷ்க்ருதம் கிஞ்சிந் மஹதஸ்தி ந ஸம்சய: | ஸமர்த்தாவபி தௌ யந்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ=மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி ந ஸம்சய:, ஸமர்த்தாவபி தௌ யந்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ" என்றாள். விரோதிகளைத்தொலைத்து என்னை ரக்ஷிக்கைக்குறுப்பான ஆற்றல்படைத்த அவ்விரண்டு ஆண்புலிகளும் என்னைக் கடாக்ஷியாதேயிருந்தார்களாகில் இது என்னுடைய பாபத்தின் பலனேயன்றோ என்றாள்

பிராட்டி. இங்கு * துஷ்க்ருதம் கிஞ்சித்மஹத் * என்கிறாள். கிஞ்சித்என்றால் சிறிது என்றபடி; மஹத் என்றால் பெரிது என்றபடி. சிறிதாயும் பெரிதாயுமிருக்கிற பாபம் தனக்கு உண்டென்று சொல்லுகிற பிராட்டியின் திருவுள்ளம் யாதெனில்; பகவத் விஷயத்திலேபட்ட அபசாரத்தைச் சிறியபாபமென்றும், பாகவத விஷயத்திலே பட்ட அபசாரத்தைப் பெரிய பாபமென்றும், கருதினபடி. காட்டுக்குப் புறப்படும் ஸமயத்திலே தன்னை உடன்கொண்டு செல்லமாட்டேனென்ற பெருமாளை நோக்கி "ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்" என்று பழித்துக்கூறினது பகவத்விஷயாபசாரம். மாரீசமாயமான் பின்னே பெருமாள் எழுந்தருளியிருந்தபோது கபடமான கூக்குரலைக்கேட்ட பிராட்டி இளைய பெருமாளை நோக்கிப் பலவார்த்தைகள் சொல்லிவருகையில் "அநார்ய கருணாரம்ப ந்ருசம்ஸ குலபாம்ஸந—அநார்யகருணாரம்ப ந்ருசம்ஸ! குலபாம்ஸந! * என்று தொடங்கி * ஸுதுஷ்டஸ்த்வம் வநே ராமமேகமேகோநுகச்சஸி= மம ஹேதோ: ப்ரதிச்சந்ந: ப்ரயுக்தோ பரதேந வா, தந்ந ஸித்யதி ஸௌமித்ரே தவ வா பரதஸ்ய வா." என்று மிகவும் கடுமையாகப் பழித்துக்கூறினது பாகவதாபசாரம். இவற்றுள் பகவதபசாரம் அவ்வளவு கொடிதன்றாகையாலே கிஞ்சித் எனப்பட்டது; பாகவதாபசாரம் மிகக்கொடிதாகையாலே மஹத் எனப்பட்டது.

ஆழ்வார் தாம் கதறிக்கூவியழைக்கிறபடியை அருளிச்செய்கிறார் ஞாலமுண்டாய்! என்று தொடங்கி. விசாலமான பூமிப்பரப்பையெல்லாம் பிரளய வெள்ளம் கொள்ளை கொள்ளப்புகுந்த காலத்திலே "மண்ணோடும் விண்ணோடும் வானவரும் தானவரும் மற்றுமெல்லாம், உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல் தான் விழுங்கியுய்யக்கொண்ட" என்கிறபடியே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தவனே! என்று கூப்பிடாநின்றேன். ஆபத்துக்கு வந்து உதவுமவனல்லையோ நீ; பிரளயாபத்து வந்தால்தான் ரக்ஷிப்பதென்று ஒரு விரதமுண்டோ?

ஞானமூர்த்தீ =சேதநகோடியிலே சேர்ந்த எனக்கும் ஞானமுண்டு; ஆகிலும் என்னுடையஞானம் என்னை நித்யஸம்ஸாரியாக்கிக் கொள்வதற்கன்றோ உதவுகின்றது. இந்த ஸம்ஸாரத்தைக்கழித்து என்னைத்திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ளுகைக்கிடான ஞானமன்றோ உன்னுடையது. "ஆமாறொன்றறியேன் நான்" என்றிருக்குமடியேனுக்கு "ஆமாறறியும் பிரானே!" என்னப்படுகிற நீ உதவித்தீரவேண்டுமே. நான் அறிவது ஒன்றுமில்லை; நீ அறியாதது ஒன்றுமில்லை; நான் செய்யவல்லது ஒன்றுமில்லை; நீ செய்யமாட்டாதது ஒன்றுமில்லை. ஒருவனுக்குக் கண்ணும் தெரியாதே காலும்நடைதாராதேயிருந்தது; மற்றொருவனுக்குக்கண்ணும் தெரிந்து காலும் நடைதருவதாயிருந்தது; இப்படியிருக்குமானால் ஆர்க்கு ஆர் வழிகாட்டிக்கொண்டுபோவார் என்பதை நான் சொல்லவேணுமோ? .

ஞானமும் சக்தியுமுள்ளவர்களெல்லாரும் அஜ்ஞரும் அசக்தருமாயிருப்பாரை ரக்ஷித்தேயாகவேணுமென்று ஒரு நிர்ப்பந்தமுண்டோவென்று எம்பெரு

மானுக்குத் திருவுள்ளமாக, நாராயணா என்கிருர். ரக்ஷிக்கவேண்டிய ப்ராப்தி யில்லையாகில் நிர்ப்பந்தமில்லைதான்; ப்ராப்தியுள்ள விடத்திலே உபேக்ஷித்திருந் தால் பழிப்பாகுமன்ரோ. நீ நாராயணனுகையாலே ரக்ஷிப்பதற்கென்றே முடி கவித்திருக்கிறுயன்ரோ. "உன்றன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்கவொழி யாது" என்னும்படியான குடல்துடக்கு இருக்கும்போது கைவாங்கியிருக்க வல்லையோ? சரீரத்திற்கு ஆகவேண்டிய நன்மையை சரீரியன்ரோ நோக்கக் கடமைப்பட்டவன். உடையவன் உடைமையைப் பெறுகைக்கு வியாபரிக்க வேண்டாவோ? என்பதான கருத்துக்கள் நாராயணா! என்பதில் உய்த்துணரத் தக்கன.

என்றேன்று என்கையாலே இப்படியே பலகால் கூப்பிட்டுக்கொண்டே யிருக்கின்றமை காட்டப்பட்டது. இவர்தாம் கூப்பிடுவது ஒரு ப்ரயோஜனத்திற் காகவாகில் அதுகிடைத்ததென்று வாய் ஓயலாம்; கூப்பிடுகைதானே ப்ரயோஜந் மாகையாலே ஓவாதுரைக்குமுரை இதுவேகாணீர்.

காலந்தோறும் யானிருந்து என்றவிடத்தில் நம்பிள்ளையீடு:— "படுவ தெல்லாம்பட்டு நூறே பிராயமாக இருக்கவேணுமோ? குணாதிக விஷயத்தைப் பிரிந்தால் முடியவொட்டாது 'இன்னமும் காணலாமோ' என்னும் நசை."

கைதலைபூசலிடுவதாவது—"மத்தகத்திடைக் கைகளைக்கூப்பி" என்றும் "ஶிரஸ்யஞ்ஜலி மாதாய— சிரஸ்யஞ்ஜலிமாதாய" என்றும் சொல்லுகிறபடியே தலைமேல் கரங்குவிக்கை. ஆற்றாமையினுல் தலைமேல்மோதிக்கொள்ளும்படியைச் சொல்லுகிறதென்றுங் கூறுவர்.

கோலமேனி காணவாராய் = ஆசைப்பட்டவர்கள்கண்டு அநுபவிப்பதற் காகவன்ரோ இத்திருமேனி படைத்தது. "பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே" என்று சொல்லியிருக்க இப்படியும் உபேக்ஷிப்பதுண்டோ? "வாசிவல்லீரிந்தளூரீர்! வாழ்ந்தேபோம் நீரே" என்று வயிறெரிந்து சொல்லும்படியாக வைத்துக்கொள் வது தகுதியோ? பரிமளப்ரசுரமான தீர்த்தத்தை சேகரித்துவைப்பது விடா யர்விடாய் கெடுவதற்காகவன்ரோ; அதனை அவர்கட்கு எட்டாதே வைப்பது முண்டோ? என்கிருர். காணவாராய் என்றது காணவரவேணுமென்றபடியன்று; காணவருகின்றிலையே! என்றபடி. நித்ய விபூதியிற்சென்று ஸேவிப்பதிலுங்காட் டில் இவ்விபூதியிலேயே ஸேவிக்கப்பெறுதல் பரமோத்தேச்யமாகையாலே இக் கருத்துத்தோன்ற "கூவியுங்கொள்ளாயே" என்கிருர். .... (க)

கொள்ளமாளாவின்பவெள்ளம் கோதிலதந்திடும் * என்
வள்ளலேயோ! வையம்கொண்ட வாமனுவோ! என்றேன்று *
நள்ளிராவும்நன்பகலும் நானிருந்தோலமிட்டால் *
கள்ளமாயாவுன்னை என்கண்காணவந்தீயாயே. (உ)

கொள்ள மாளா	அநுபவிக்கவநுபவிக்க எல்லைகாணவொண்ணுத
இன்பம் வெள்ளம்	ஆனந்தப்பெருக்கை
கோது இல	குறையற
தந்திடும்	உபகரிக்கின்ற
என் வள்ளலே	என் உதாரனே !
வையம் கொண்ட	(மாவலிபக்கல் நீரேற்றுப் பெற்று) உலகங்களை யெல்லாம் அளந்து கொண்ட
வாமனு	வாமனமூர்த்தியே !

ஓ ஓ என்று	என்று ஆர்த்தியோடே சொல்லி
நள் இராவும் நன் பகலும்	இரவும் பகலும்
நான் இருந்து ஓலமிட்டால்	நான் ஆசையோடிருந்து கூப்பிட்டால்
கள்ளம் மாயா	க்ருத்ரிமனுன ஆச்சர்ய பூதனே !
உன்னை	உன்னை
என் கண் காண	என் கண்கள் காணுமாறு
வந்து ஈயாய் ஏ	வந்து ஸேவை ஸாதிக் கின்றிலையே !.

* * * [கொள்ளமாளா] ஏற்கனவே தம் திறத்தில் எம்பெருமான் செய்தருளி யிருக்கிற உபகாரங்கள் சிலவற்றைச் சொல்லி 'இப்படி உபகாரம் செய்தருளின நீ இப்போது உபேக்ஷிப்பது தகுதியோ? என்கிருர். * தீர்ப்பாரையாமினிக்கு முன்னே * வீற்றிருந்தேழுலகில் "வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்தனன்" என்று சொல்லும்படியாக அப்போது எம்பெருமான் தந்த பரமாநந்தஸந்தோஹத் தைத் திருவுள்ளம்பற்றிக் "கொள்ளமாளா வின்பவெள்ளம் கோதில தந்திடும் என் வள்ளலே!" என்கிருர். கொள்ளக்கொள்ள மாளாத இன்பவெள்ளமாவது மேன்மேலும் பெருகிச்செல்கின்ற இன்பவெள்ளம். அதனைக் கோதில்லாதபடி தருகையாவது என்னென்னில்; பகவத் விஷயத்தை அநுபவித்துக்கொண்டே வரும்போது 'அநுபவித்தது போதும்' என்று தோன்றினும், 'இதைவிட்டு இன்னொரு விஷயத்தை அநுபவிப்போம்' என்று ஆசை பிறந்தாலும் அது இன் பத்திற்குக் கோது; அத்தகைய கோது இல்லாதபடி தந்தனனென்றது "எப் பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே' என்னும்படியாகத் தந்தருளினனென்றபடி.

என்வள்ளலே! என்று சொல்லி ஓ! என்கிறர், இப்படி இப்போது கூப் பிடப்பண்ண நினைத்திருந்தால் * வீற்றிருந்தேழுலகிலே அப்படியென்னை அநு பவிப்பிக்கவேணுமோ? என்கைக்காக.

வையங்கோண்ட வாமனுவோ != ப்ரயோஜநாந்தர பரனை வொருவ னுக்குக் காரியஞ் செய்யநினைத்து அழியமாறினவுனக்கு அநந்யப்ரயோஜநனை என் விஷயத்திலே இரங்குகை அரிதோ என்று கூறியவாறு. வையத்தை இரந்த காலத்தில் வாமநவேஷமிருந்ததேயல்லது, வையங்கொண்ட காலத்தில் அஃது இல்லையே; த்ரிவிக்ரம வேஷமன்ரோ அப்போது இருந்தது; அப்படியிருக்க 'வையங்கொண்ட வாமனு!' என்றது என் என்னில்; ஆழ்வாருடைய திருவுள் ளத்தில் மாமநவேஷமொன்றே அழகின் மிகுதியால் நிலைத்திருக்கிறபடி. இந்தி ரனைப்போலே ராஜ்யம்பெற்று மீளவேண்டியவரல்லாமையாலே இங்ஙனே கூப்பி டுவதே இவர்க்குப் போது போக்கென்பது "என்றேன்று" என்பதனால் தெரி

159933
022 21,426
438-13-1

விக்கப்படும். இப்படிப் பல திருநாமங்களைச் சொல்லி இரவும் பகலும் நான் கூப்பிட்டால் என் கண்கள் விடாய் கெடும்படி நடையழகு காட்டி என் முன்னே வந்து நிற்கின்றிலையே! என்கிறார். .... (௨)

ஈவிலாததீவினைகள் எத்தனைசெய்தனன்கொல்? *
தாவிவையம்கொண்டவெந்தாய்! தாமோதரா! என்றென்று *
கூவிக்கூவிநெஞ்சுருகிக் கண்பனிசோரநின்றால் *
பாவிநீயென்றொன்றுசொல்லாய் பாவியேன்காணவந்தே. (௩)

தீ வினைகள்	பாவங்களை
ஈவு இலாத	முடிவில்லாதபடி
எத்தனை செய்தனன் கொல்	எவ்வளவு செய்தேனோ?
தாவி	திருவடிகளாலே வியாபித்து
வையம்	உலகங்களை
கொண்ட	ஸ்வாதீனப்படுத்திக் கொண்ட
எந்தாய்	ஸ்வாமியே!
தாமோதரா	தாம்பால்ஆப்புண்ட தழும்பை உதரத்திலுடையவனே!

என்று என்று கூவி கூவி	என்று பலகால் சொல்லி இடைவிடாதே கூப்பிட்டு
நெஞ்சு உருகி	நெஞ்சு நீராயுருகி
கண் பனி சோர நின்றால்	கண்ணீர் பெருக நின்றால்,
பாவியேன்	பாபியான நான்
காண	கண்ணாலே ஸேவிக்கும் படியாக
வந்து	எழுந்தருளி
நீ பாவி என்று	'(ஆழ்வாரே!) நீர் பாபி காணும்' என்று
ஒன்று சொல்லாய்	ஒரு வார்த்தையும்சொல்லுகின்றாயில்லை.

* * * [ஈவிலாத.] நான் விரும்புகிறபடி என் கண் முன்னே வந்து காட்சி தந்தருளத் திருவுள்ளமில்லையாகிலும் "நீ பாவி, உனக்கு நான் காட்சிதரமாட்டேன்" என்கிறவொரு வார்த்தையையாவது என் கண் வட்டத்திலே வந்து சொல்லிப்போனாலாகாதோவென்கிறார்.

அவனோட்டைக் கலவியைபே அல்லும் பகலும் ஆசைப்பட்டுக்கொண்டு கிடக்கிற ஆழ்வார் 'பாவி நீ யென்றொன்று சொல்லாய்' என்கைக்குக் கருத்தியாதெனில்; 'ஆழ்வீர்! நீர் பாவமே செய்து பாவியானவராகையாலே உம்மோடு கலப்பதற்கு எனக்கு விருப்பமில்லை' என்று சொல்லுகிற இந்த வார்த்தையையாவது தமது முகத்தை நோக்கி அவன் சொல்லுவானாகில் அப்போதைய ஸேவையாவது கிடைக்குமே என்றும், கண்ணிலே தென்பட்டானாகில் பிறகு அவனை உபாயங்களால் கவர்ந்து கொள்ளலாமென்றும் நினைத்துச் சொன்னதத்தனை. ஆண்டாளும் "மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடை தான் தருமேல் மிக நன்றே" என்றது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"அவச்ய மநு போக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்" என்றும் "நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி" என்றுமுள்ள பிரமாணங்களை நோக்கி

னால் தீவினைகள் அநுபவித்துத் தீர்க்கமுடியும் என்று ஏற்படுகிறது; அப்படியும் தீராத எத்தனை பாவங்களைப் பண்ணினேனோ! என்கிறார் முதலடியில். "மதியிலேன் வல்வினையே மாளாதோ" என்றதும் காண்க.

தாவியித்யாதி. * தன்னுருவமாரு மறியாமல் தானங்கோர் மன்னுங்குறளுருவில் மாணியாய் மாவலிதன் பொன்னியலும்வேள்விக்கண் புக்கிருந்து போர்வேந்தர்மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண் மன்னா! தருகென்று வாய்திறப்ப, மற்றவனுமென்னால் தரப்பட்டதென்றலுமே, அத்துணைக்கண் மின்னார் மணிமுடிபோய் விண்தடவ, மேலெடுத்த பொன்னார் கனைகழற்காலேழுலகும் போய்க்கடந்த பரத்வத்தைச் சொல்லுவேன்; * உறியார்ந்த நறுவெண்ணெயொளியால் சென்று அங்குண்டானைக்கண்டு ஆய்ச்சியுரலோடார்க்கத் தறியார்ந்த கருங்களிறே போலநின்று தடங்கண்கள் பனிமல்கும் தன்மையாகிய ஸௌலப்யத்தைப் பேசுவேன்; இங்ஙனே பரத்வ ஸௌலப்யங்களை மாறிமாறிப் பேசிக் கண்ணுங் கண்ணீருமாய் நின்றக்கால் கண்ணெதிரே வந்து ஸேவைதந்தருளலாகாதோ? அநுக்ரஹம் செய்யத் திருவுள்ளமில்லையாகிலும் நிக்ரஹித்து விட்டேனென்றாவது கண் முன்னேவந்து நின்று சொல்லிப் போனாலாகாதோ? என்னை நீ பாக்யவான் என்றாலும் பாவியென்றாலும் அதில் எனக்கொரு நிர்ப்பந்தமில்லை; உன் திருமிடற்றோசை கேட்கவேண்டுவதே எனக்கு அபேக்ஷிதம்; கண்ணுக்குத் தோற்றாதே நின்று மிடற்றோசையைக் காட்டிவிட்டாலும் த்ருப்தியடையேன்; என் கண்ணுக்கு இலக்காகி வந்து சொல்லவேணும். .... (௩)

காணவந்தென்கண்முகப்பே தாமரைக்கண்பிறழ *
ஆணிசெம்பொன்மேனியெந்தாய்! நின்றருளாயென்றென்று *
நாணமில்லாச்சிறுதகையேன் நானிங்கலற்றுவதென்?*
பேணிவானோர்காணமாட்டாப் பீடுடையப்பனையே. (௪)

வானோர்	பிரமன் முதலிய தேவர்கள்
பேணி	விரும்பியும்
காணமாட்டா	காணமுடியாதபடி
பீடு உடை	பெருமைவாய்ந்த
அப்பனை	ஸ்வாமியை நோக்கி,
ஆணி செம் பொன் மேனி எந்தாய்	"மாற்றுயர்ந்த பொன் போலே விரும்பத் தகுந்த திருமேனி படைத்தபிரானே!
தாமரை கண் பிறழ	தாமரைப்பூப்போன்ற திருக்கண்கள் விளங்கும்படி

(என்னைப் பார்த்துக் கொண்டு)

காணவந்து	நான் காணுமாறு வந்து
என் கண் முகப்பே	என் கண்முன்னே
நின்றருளாய்	நின்றருளவேணும்"
என்று என்று	என்று ஓயாதே சொல்லி
சிறு தகையேன் நான்	நீசனாகிய நான்
நாணம் இல்லா	வெட்கம் கெட்டவனாய்க் கொண்டு
இங்கு அலற்றுவது என்	இங்கே அலற்றுவதற்கு ஒரு பிரயோஜனமுமில்லையே!

* * * [காணவந்து.] பிரமன் முதலிய தேவர்களுக்கும் காணக்கிடைக்காத பெருமானை வடிவழகு காணவிரும்பி வெட்கமற்று நான் கூப்பிடாநின்றேனே! இதற்கு என்ன பலனுண்டு! என்கிறார்.

ஆணி செம்பொன் மேனி = ஆணிப் பொன்னாவது மாற்றறிதற்குக் கொள்ளும் உயர்தரப்பொன். இதுக்குமேலே மாற்றில்லையென்னும்படியான சிறந்த பொன் என்றும் சொல்லுவர். எம்பெருமானுடைய திருமேனி கருமுகில் திருநிறத்ததாயிருக்க, செம்பொன்மேனி யென்றது என்? என்னில்; செம்பொன் நிறத்திற்கு உவமையாகக் கூறப்பட்டதன்று; ஸ்ப்ருஹணீயதைக்குக் கூறிற்றென்க; அதுபோலே விரும்பத்தக்க திருமேனி என்றபடி. “ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாமணீயாம்ஸமணீயஸாம்। ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத்தம் புருஷம் பரம்॥ = ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம் ஸமணீயஸாம், ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத் து புருஷம் பரம்.” என்றும், “யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே” என்றுமுள்ள பிரமாணங்களைக்கொண்டும் நிர்வஹிக்கலாம். ஹிரண்யவர்ணையான பிராட்டியின் சேர்க்கையாலுண்டான நிழலீட்டாலே எம்பெருமானும் ஹிரண்மயனாகத் தோற்றலாம். இப்படிப்பட்ட திருமேனி படைத்தவனே! என் கண் முன்னே வந்து நிற்கவேணும்; என்று பலகால் சொல்லியழைக்கிறேனே! இதற்கு ஒரு பலன் கிடைக்கப்போகிறதோ?

மேம்பட்டவர்களாகப் பிரசித்தி பெற்றிருக்கின்ற தேவர்களுக்கும் காணக் கிடைக்கமாட்டாத பெருமானைத் தாம் காண ஆசைப்பட்டது வெட்கமில்லாமையின் காரியமென்று காட்டுதற்காக நாணமில்லா என்றார். ... (ச)

அப்பனே! அடலாழியானே! ஆழ்கடலைக்கடந்த
துப்பனே!* உன்தோள்கள்நான்கும் கண்டிடக்கூடுங்கொலென்று *
எப்பொழுதும்கண்ணநீர்கொண்டு ஆவிதுவர்ந்துதுவர்ந்து *
இப்பொழுதேவந்திடாயென்று ஏழையேன்நோக்குவனே. (ரு)

அப்பனே	உபகாரம் செய்யுமியல்வினனே!	கண்டிட கூடும் கொல் என்று	ஸேவிக்க நேருமோ! என்று எண்ணி
அடல் ஆழியானே	வீரத்தன்மை வாய்ந்த திருவாழியை யுடையவனே!	எப்பொழுதும்	எப்போதும்
ஆழ் கடலை	ஆழமான கடலை	கண்ணநீர் கொண்டு	கண்ணீரோடிருந்து
கடைந்த	கடைந்து அன்பர்கட்கு அமுதமளித்த	ஆவி துவர்ந்து துவர்ந்து	பிராணன் மிகவும் உலர்ந்து
துப்பனே	ஸமர்த்தனே!	இப்பொழுதே வந்திடாய் என்று	உடனே எழுந்தருளவேணுமென்று அபேக்ஷித்து
உன் நான்கு தோள்களும்	உனது திருத்தோள்கள் நான்கையும்	ஏழையேன் நோக்குவன்	சபலனான நான் சுற்றும் பாராநின்றேன்.

யுணர்ந்து, ஆத்மதர்சநஃபல ப்ராப்தி மரணாவதியாகப் பெற்று, காலாஸத்தி ஃபலகதிக்குத் துணைகூட்டின தம்பேற்றைப் பிறரறியப் பத்துத் தோறும் வெளியிடுகிறார்.

மூன்றும் பிரகரணம் முற்றிற்று.

ப்ரேமபலமான உபாயம்புகுதலைச் செய்து என்றபடி; விளம்பம் பொறாமையினாலுண்டான த்வரையாலே உபாயவரணம் விளைவதனால் இது ப்ரேமாதிசயத்தின் பலன் என்றது.

7. [ஸாதநஃபலோபகாரக் கைம்மாறின்றி.] கீழ்ப்பத்தில் பண்ணின உபாயவரணத்தில் உபாயபூதனான எம்பெருமானாலே கிடைத்த பலனான உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரமாக * உதவிக் கைம்மாறு என்னுயிர் * என்று ஆத்மஸமர்ப்பணம் பண்ணத்தேடி, அவ்வாத்மவஸ்துதானும் அவனுடையதேயென்று அறிகையாலே * அதுவுமற்றாங்கவன் தன்னது—எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே * என்று ப்ரத்யுபகாரம் காணாமல் தடுமாறுகையாகிற பேற்றைப் பெற்றார் ஏழாம்பத்தில்.

8. [க்ருதஜ்ஞதாஃபலப்ரதிக்ருதமானத்தை யுணர்ந்து.] கீழ்ப்பத்தில் நடந்த க்ருதஜ்ஞதைக்குப் பலமான ப்ரத்யுபகாரமாகத் “தோள்களையாரத் தழுவி யென்னுயிரை அறவிலை செய்தனன்” என்று—ப்ரேமத்தாலே கலங்கி ஸமர்ப்பித்த ஆத்மவஸ்துவை * நின்றவொன்றை யுணர்ந்தேன் * என்று தேஹாதிகளில் விலக்ஷணமாய் அவனுக்கு அநந்யார்ஹ சேஷமாயிருக்குமென்று அறிகையாகிற பேற்றை எட்டாம் பத்தில் பெற்றார்.

9. [ஆத்மதர்சந பலப்ராப்தி மரணாவதியாகப் பெற்று.] கீழ்ப்பத்தில் பெற்ற ஆத்ம ஸ்வரூப ஜ்ஞானத்திற்குப் பலன் பகவத்ப்ராப்தியாகையாலே அதனை * மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் * என்கிறபடியே சரீராவஸாநத்திலே பண்ணித் தருகிறோமென்று அவன் நாளிட்டுக் கொடுக்கப் பெறுகையாகிற பேற்றைப் பெற்றார் ஒன்பதாம்பத்தில்.

10. [காலாஸத்திஃபலகதிக்குத் துணை கூட்டின] கீழ்ப்பத்தில் நாளிடப்பெற்ற ப்ராப்திகாலம் அணித்தானதற்குப் பலன் அர்ச்சிராதி மார்க்கத்தாலே தேசவிசேஷத்தேறப் போவதாகையாலே அந்த அர்ச்சிராதிகதிக்கு * காளமேகத்தையன்றி மற்றொன்றிலம் கதி * என்றும், * திருமோகூராத்தன் தாமரையடியன்றி மற்றிலமரணே * என்றும் பரமாப்தனான அவன் தன்னையே துணைகூட்டிக்கொண்டார் பத்தாம்பத்தில்.

ஆக இங்ஙனே தம்முடைய பேறுகளைப் பிறரறிந்து வாழும்படி முதல் பத்தே தொடங்கிப் பத்துப்பத்தாலும் வெளியிட்டருளுகிறாராயிற்று. (218)

பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
ஆசார்யஹ்ருதய ஸாரத்தில் மூன்றும் பிரகரணம் முற்றிற்று.

ஸ்ரீ :

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அழகியமணவாளப்பெருமாள்நாயனார் திருவடிகளே சரணம்.

அன்னபுகழ் முடும்பை அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த

ஆசார்யஹ்ருதயத்தில்

நான்காம் ப்ரகரணம்.

219.—1. பரபரனாய்நின்ற வளவேழ்வைப்பாம் அவையுளும்பர்வானவராதிபதி

219. [முதற்பத்தின் அர்த்த விசேஷங்களைச் சுருக்கி யருளிச்செய்தல்.]

முதற்பத்தின் ஸாரமான கருத்தாவது;—
பராத்பரனான எம்பெருமான் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே ஆழ்வார்க்கு அகவிருளைப்போக்கி, பக்தியாக வடிவெடுத்த ஞானத்தைக்கொடுத்து, இன்னமும் இவர் நம்மை மறந்துபோய்விடக்கூடுமென்றெண்ணி அங்ஙனம் மறவாமைக்காக இடைவிடாதே தம்முடைய ஹ்ருதயத்திலே நிரந்தரவாஸம் பண்ணினான்;

அத்தாலே நிஷ்களங்கமான தத்வஜ்ஞானத்தையுடையரான ஆழ்வார் அவனுடைய திருக்கல்யாண குணங்களைத் தமது திருவுள்ளத்தோடே அநுபவித்தார்; அவ்விஷயம் தனியிருந்து அநுபவிக்கவொண்ணாமையாலே ஸம்ஸாரிகளையுங்கூட்டிக்கொண்டு பெருந்திரளாயிருந்து அநுபவிக்க விரும்பினாராகையாலே அவர்களைநோக்கி த்யாஜ்யமான ஸம்ஸாரத்தின் தோஷத்தையும் உபாதேயமான பகவத்விஷயத்தின் குணத்தையும் அவ்வெம்பெருமானை பஜிக்கவேண்டிய ப்ரகாரத்தையும் பஜனத்துக்குப் பற்றுக்கோடான திருமந்திரத்தையுமுபதேசித்து, பஜநீயனான அவனுடைய ஸௌலப்யகுணமென்ன, அபராதங்களைப் பொறுக்குந் தன்மையென்ன, நீசர்களோடும் கலந்துபரிமாறும் சீலகுணமென்ன, எளிதாக ஆராதிக்கக்கூடியவனாயிருக்குந் தன்மையென்ன ஆச்ரயணம் போக்யமாயிருக்கப்பெற்ற தன்மையென்ன, கோணலேவடிவெடுத்த ஸம்ஸாரிகளோடும் செவ்வியனாய்ப்பரிமாறுகையாகிற ருஜுத்வகுணமென்ன,

மயர்வறமன்னி மனம்வைக்கத்திருத்தி மறக்குமேன்று நல்கிவிடாதேமன்ன,

தன்னுடைய போகங்களைப் பொறுக்கப்பொறுக்க அடைவேகொடுத்தருளுந் தன்மையென்ன, பரமபக்திக்கும் பரிகணனைக்குமொக்க முகங்காட்டுகையாகிற ஸாம்யமென்ன—ஆகிற இக்குணங்களை ஒவ்வொரு திருவாய்மொழியாலும் நிரூபணம் செய்யாநின்றுகொண்டு அவ்வழியாலே பஜநத்தினுடைய ஸௌகர்ய போக்யதைகளையும், பஜிக்கவே ஸகல பலன்களும் கைகூடுமென்பதையும், பஜிக்கத்தொடங்கும்போதே பஜநவிரோதிகளெல்லாம் தொலைந்தொழியுமென்பதையும் அறிவித்து, ஆகவே ஸ்ரீகீதையில் அவனருளிச்செய்த பக்திமார்க்கத்திலேநின்று தேவதாந்தரங்கள் பக்கலில் பரத்வசங்கையைத் தவிர்த்து அவன் விஷயமான ஞானத்தைக்கொண்டு அவன் பக்கலிலே அநந்ய ப்ரயோஜந பக்தியைப் பண்ணுங்கோளென்று, தமக்கு அவன் மயர்வற மதிநலமருளினாப்போலே தாமும் இந்த ஸம்ஸாரிகளுக்கு அஜ்ஞாந நிவ்ருத்தி பூர்வகமாக ஜ்ஞான பக்திகளை உபதேசத்தாலே உண்டாக்கி பஜநத்திலே மூட்டுகிறார் முதற்பத்தினால்— என்பது மூல சூர்ணிகையின் தேர்ந்த கருத்து.

[இனி மூலத்தின்மேல் பொருள்விவரிக்கப்படுகிறது.]

இப்பத்தில் ஆழ்வார் முக்கியமாக எடுத்துப் பேசின பகவத்குணம் இன்னது (1) என்பதும், அவ்வெம்பெருமான் ஆழ்வார்க்குச்செய்த உபகாரம் இன்னது (2) என்பதும், ஆழ்வார் ஸ்வாநுபவத்தளவிலே நிற்கமாட்டாமல் ஸம்ஸாரிகளுக்கும் உபதேசித்து அவர்களையும் திருத்தித் தமக்குத் துணைவராகக் கூட்டிக்கொள்ள விரும்பி உபதேசித்தவை இன்னின்ன விஷயங்கள் (3) என்பதுமாக மூன்று ப்ரணாளியாய் மூலசூர்ணிகை அமைந்திருக்கின்றது.

1. இப்பத்தில் முக்கியமாக ஆழ்வார்பேசின பகவத்குணம் பரத்வம். "பரபரன் ஆய்நின்ற வளவேழ் வைப்பாம் அவையுள் உம்பர்வானவ ரதிபதி" என்னுமளவும் பரத்வத்தில் நோக்கான சந்தைகளை அடுக்கியிருக்கிறார்.

[பரபரன்—]* வரன்முதலாய் அவைமுழுதுண்ட பரபரன் * [ஆய்நின்ற], * கரவிசும்பெரிவளி நீர் நிலமிவைமிசை, வரனவில் திறல்வலியளி பொறையாய் நின்றபரன் * [வளவேழ்—] *வளவேழுலகின் முதலாய வானோரிறை.* [வைப்பாம்] * வைப்பாம் மருந்தாம்........நலத்தாலுயர்ந்துயர்ந்து அப்பாலவன் * [அவையுள்.] *அவையுள் தனிமுதலம்மான்* [உம்பர் வானவர்] *உம்பர் வானவராதியஞ்சோதி.* [அதிபதி] * அயர்வறு மமரர்களதிபதி * ஆகவிந்த ஏழுசந்தைகளினால் பிரதிபாதிக்கப்படுகிற பரத்வத்தையுடையனான எம்பெருமானவன் என்றபடி. இச்சொல், மேலே " நல்கிவிடாதே மன்ன " என்கிறவிடத்தே அந்வயிக்கும்.

[1. மயர்வற 2. மன்னி 3. மனம் வைக்கத்திருத்தி 4. மறக்குமென்று 5. நல்கிவிடாதே 6. மன்ன] * மயர்வற மதிநல மருளினன் * என்கிற பாசுரப்

அயர்ப்பிலனறுத்தேன் என்சொல்லி மறப்பனோ வேண்ணும்படி தத்வஜ்ஞான வர் சுடரடியெம்பிரானை விடாது கண்டாய் நீயும் நானுமென்கிற ஸஹ்ருதயாநு

படியே அஜ்ஞாநத்தை இவர்க்கு அடியோடே போக்கி பக்திரூபமான ஞானத்தைக்கொடுத்து, 2. * மயர்வற வென்மனத்தே மன்னினான் * என்கிற பாசுரப்படியே இவர் திருவுள்ளத்திலே புகுந்து, 3. *சார்ந்த இருவல்வினைகளும் சரித்து மாயப்பற்றறுத்துத் தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி * என்கிற பாசுரப்படியே இவரோடு பொருந்திக் கிடக்கிற புண்ய பாபரூப கருமங்களையும் பாஹ்ய விஷய ருசிவாஸனைகளையும் போக்கி, 'நான் அயோக்கியன்' என்று இவர் அகன்றவளவிலும் தன் சீலத்தைக்காட்டி மீட்டுத் தன் பக்கலிலே யாக்கிக் கொண்டு திருத்தி, 4. * மறக்குமென்று செந்தாமரைக்கண்ணொடும் * 5. *நல்கி யென்னைவிடான் நம்பி நம்பியே * 6. * மறப்பற வென்னுள்ளே மன்னினான் * என்கிற பாசுரங்களிற்படியே, இவர் ஒருகாலும் நம்மை மறந்தாராகக்கூடாதென்று கருதி இவரைவிடாதே அழகிய திருக்கண்களாலே குளிரநோக்கிக் கொண்டு ஒருநாளும் மறக்கவொண்ணாதபடி இவரது திருவுள்ளத்திலே ஸ்தாவர ப்ரதிஷ்டையாக இருக்க.

இப்படி எம்பெருமான் அருள்புரிந்த பிறகு ஆழ்வார் எவ்விதமாக ஆனாரென்பது மேலே சொல்லுகிறது.

[1. அயர்ப்பிலன் 2. அறுத்தேன் 3. என்சொல்லிமறப்பனோ வேண்ணும் படி தத்வஜ்ஞானவர்.] 1. * பெருநிலங்கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன் * (அதாவது) குணகுண நிரூபணம் பண்ணாதே பூமிப் பரப்பையெல்லாம் அளந்த பரமபோக்யமான திருவடிகளை ஒருநாளும் மறவேன்—என்றும்; 2 * தூயவமுதைப் பருகிப்பருகி என்மாயப் பிறவி மயர்வறுத்தேனே * (அதாவது) பரமபோக்யனானவனை இடைவிடாது அநுபவித்து அஜ்ஞானத்தைப் போக்கிக் கொண்டேன்—என்றும்; 3. * எம்பிரானை யென்சொல்லி மறப்பனோ * (அதாவது) எனக்கு மஹோபகாரம் பண்ணினவனை எக்காரணம்பற்றி மறப்பது—என்றும் பேசும்படி நிஷ்களங்கமான தத்வ ஜ்ஞாநத்தை யுடையவரானார் ஆழ்வார்.

[இப்படிப்பட்ட ஆழ்வார் தாம் திருவுள்ளத்தோடே அநுபவித்த அநுபவம் ஸம்ஸாரிகளுக்கும் ஆகவேணுமென்று கோலினாரென்பது மேலே சொல்லுகிறது.]

[1. சுடரடி 2. யெம்பிரானை 3. விடாது 4. கண்டாய் 5. நீயும் நானுமென்கிற ஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி.] 1. * சுடரடி தொழுதெழு என்மனனே * (அதாவது) நெஞ்சே! அவன் திருவடிகளிலே நித்ய கைங்கர்யத்தைப்பண்ணி உஜ்ஜீவிக்கப்பாராய்—என்றும்; 2. * எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே * (அதாவது) எனக்கு விதேயமான மனமே! நமக்கு உபகாரம் பண்ணின பெருமானைத் தொழப்பாராய்—என்றும்; 3. * நெஞ்சமே நல்லை நல்லை—மலராள் மணவாளனைத் துஞ்சும்போதும்விடாது தொடர் * (அதாவது) நெஞ்சே! நீ செய்தது மிகவும் நல்லது; நான் அயோக்யதாநு ஸந்தானத்தாலே

பவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி வீடுமினென்று த்யாஜ்யோபாதேய தோஷ குண பரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பந மந்த்ரமாக வுபதேசித்து,

அகலும்போதும் நீ திருமாலைவிடாதே யிரு—என்றும்; 4. * கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று * (அதாவது) நெஞ்சே! அவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரம் இருந்தபடி கண்டாயே; என்றும்; 5. * நீயும் நானுமிந்நேர் நிற்கில் மேல் மற்றோர் நோயும் சார்கொடான் நெஞ்சமே! சொன்னேன் * (அதாவது) நெஞ்சே! நீயும் நானும் அயோக்யதாநு ஸந்தானம்பண்ணி அகன்றுபோகாமல் இப்படியே நிற்கப்பெற்றால் எம்பெருமான் ஒருவிதமான துரிதத்தையும் சேரவிட்டுக்கொடான்; நெஞ்சே! உனக்கு இப்பரமார்த்தத்தைச் சொன்னேன்—என்றும் இங்ஙனே திருவுள்ளத்தைக் குறித்து உபதேசித்துத் திருவுள்ளமும் தாமும் கூடியநுபவித்த பகவதநுபவம் தனியே யநுபவிக்க வொண்ணாமையாலே 'இவ்வநுபவம் ஸம்ஸாரிகளுக்கும் ஆகவேணும்' என்று திருவுள்ளம்பற்றினார் ஆழ்வார்.

[இப்படிப்பட்ட ஆழ்வார் ஸம்ஸாரிகளுக்கு உபதேசித்தபடியை விரிவாகக் கூறுகிறது மேல்—]

[வீடுமினென்று த்யாஜ்யோபாதேய தோஷகுண பரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை ஸாலம்பந மந்த்ரமாக உபதேசித்து] 1. இன்னது த்யாஜ்யம் என்பதையும், 2 அதினுடைய தோஷத்தையும், 3 த்யஜிக்கவேண்டிய ப்ரகாரத்தையும்; 4. இன்னது உபாதேயம் என்பதையும், 5. அதினுடைய குணத்தையும், 6. அவ் விஷயத்தில் ஆத்மாவை ஸமர்ப்பிக்கும் க்ரமத்தையும் 7. அந்த ஸமர்ப்பண ரூபமான ஹ்ஜநத்திற்கு ஆலம்பனமான திருமந்த்ரத்தையும் உபதேசித்து என்றபடி. இவ்வளவும் * வீடுமின் முற்றவும் * என்கிற திருவாய்மொழியிலே உபதேசித்ததாகையாலே "வீடுமினென்று" என்றார். * வீடுமின் முற்றவுமென்று தொடங்கி என்றபடி. (அடைவே விவரிக்கப்படுகிறது.)

1. " வீடுமின்முற்றவும் " என்கையாலே த்யாஜ்யம் இன்னதென்று சொல்லிற்று. " புறம்புண்டான பற்றுக்களையுடைய வாஸனையோடே விடவேணும்" என்கை.

2 "மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்" என்கையாலே அதினுடைய அல்பத்வம் அஸ்திரத்வம் முதலான தோஷம் சொல்லிற்று.

3. "நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து" என்கையாலே அதை த்யஜிக்கவேண்டிய ப்ரகாரம் சொல்லிற்று; அதாவது, மறுவலிடாதபடி வேர்ப் பற்றோடே போக்கும்படி சொன்னது.

4. "வீடுடையான்" என்கையாலே உபாதேயமான பகவத்ஸ்வரூபம் சொல்லிற்று.

5. "எல்லையிலந்நலம்" என்கையாலே அவ்வஸ்துவினுடைய குணம் [ஆநந்தமயத்வம்] சொல்லிற்று.

எளிதாகஅவதரித்துப் பிழைகளை ஸஹித்துப் புரையறக்கலந்து அல்பஸந்துஷ்டனாய் அம்ருதமே ஔஷதமாக்கி நீர்புரையத் தன்னை நியமித்து

---

6. "வீடுசெய்மினோ" "இறைசேர்மின்" "இறைபற்று" "திண்கழல் சேர்" என்பவைகளாலே அவ்விஷயத்தில் ஆத்மாவை ஸமர்ப்பிக்கும் க்ரமம் சொல்லிற்று.

7. "வண்புகழ்நாரணன்" என்று அந்த ஸமர்ப்பண ரூபமான பஜநத்துக்கு ஆலம்பனமான திருமந்த்ரம் சொல்லிற்று.

[இனிமேல், பத்துடையடியவர் முதலாக ஒவ்வொரு பதிகத்தினுடையவும் ப்ரமேயம் ஸங்க்ரஹிக்கப்படுகிறது]

எளிதாக அவதரித்து. (ஒவ்வொரு வினையெச்சமும் மேலே "ஒக்கவருமவனுடைய" என்றதோடே அந்வயிக்கும்.) எம்பெருமான் அவதாரமுகத்தாலே எளியவனாகின்றானென்பதை * பத்துடையடியவரில் "எளிவருமியல்வினன் நிலைவரம்பில பலபிறப்பாய்" என்று வெளியிட்டார்.

பிழைகளைஸஹித்து. ஆச்ரயிக்குமிடத்தில் ஸுலபனாயிருந்து பின்பு அபராதம் கண்டளவிலே கைவிடுமவனன்றிக்கே அபராதங்களைப் பொறுக்குமவன் என்பதை * அஞ்சிறையமடநாரையில் "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்று வெளியிட்டார்.

புரையறக்கலந்து.—அபோக்யதாநுஸந்தானம் பண்ணித் தாங்களே அகல்கின்றவர்களையும் தன் சீலகுணத்தைக்காட்டி அணுகப்பண்ணி அவர்களோடே புரையறக் கலக்குமவன் என்பதை * வளவேழுலகில் "திசைகளெல்லாம் திருவடியால்தாயோன் தானேருருவனே" என்று வெளியிட்டார்.

அல்பஸந்துஷ்டனாய்.—அடியாரோடே ஒருநீராகக் கலக்குமவனேயானாலும் அவன் உகக்கும்படி பச்சையிடப் போகாமையாலே ஆராதிக்கை அரிது என்ன வேண்டாதபடி நம் பக்கல் பெற்றதுகொண்டு ஸந்தோஷிக்குமவன் என்பதை * பரிவதிலீசனில் "புரிவதுவும் புகைபூவே" என்று வெளியிட்டார்.

அம்ருதமே ஔஷதமாக்கி.—எம்பெருமானுடைய ஆச்ரயணமானது வருத்தமாக இராமல் மிகவும் இனிதாகவேயிருக்குமென்று ஆச்ரயணத்தின் ஸாரஸ்யத்தைப் * பிறவித்துயரறவில் "தாயவமுதைப் பருகிப் பருகியென் மாயப்பிறவி மயர்வறுத்தேனே" என்று அருளிச்செய்தார். (மிகவும் இனிதாயிருக்கிற ஆச்ரயணந்தன்னையே பிறவியென்னும் நோய்க்கு மருந்தாக்கினார் என்றபடி.

நீர்புரையத் தன்னை நியமித்து.—ஸம்ஸாரிகள், நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிராமல் பலவகைப்பட்டிருத்தலால் அன்னவர்களோடு

போகத்தை ஸாத்மிப்பித்து பக்தி கணனைகளுக்கு ஒக்கவருமவனுடைய ஸேவைக்கு எளிமையும் இனிமையுமுண்டு தொழுதால் அரும்பயனையதரும், உத்யோகத்தே வினைகளும்மாளும், அவனுரைத்த மார்க்கத்தேநின்று

எம்பெருமான் தான் பரிமாறுமிடத்தில் அவர்கள் போனவழியே தனக்கு வழியாம்படி தான் அவர்களுக்குச் செவ்வியனாய்ப் பரிமாறுமவன் என்பதை * ஒடும் புள்ளேறியில் "நீர்புரைவண்ணன்" என்பதனாலே வெளியிட்டார்.

போகத்தை ஸாத்மிப்பித்து.—அடியார்களுக்குத் தன்னையநுபவிப்பிக்குமிடத்தில் ஏககாலத்திலேயே பூர்ணாநுபவம் கொடுத்துவிடுகையன்றியே பொறுக்கப்பொறுக்கச் சிறிதுசிறிதாகக் கொடுக்குமவன் என்பதை * இவையுமவையில் "என்னுடைச்சூழலுளானே" என்று தொடங்கி "உச்சியுளானே" என்னுமளவாக அருளிச்செய்தார்.

பக்திகணனைகளுக்கு ஒக்கவருமவனுடைய=எம்பெருமான் அடியார்களுக்குக் காட்சிதருந்தன்மை எப்படிப்பட்டதென்றால், பரமபக்தியுக்தர்க்கு முகங்காட்டுவதுபோலவே எண்ணிக்கையினால் தன்னைக் குறிப்பிடுமவர்களுக்கும் முகங்காட்டுந்தன்மையுள்ளது;—(அதாவது) ஒன்று இரண்டு மூன்று என எண்ணிக்கொண்டே போனால் 'இருபத்தாறு' என்னுமளவில் தன்னைக் குறித்ததாகக் கொண்டு, வந்து நிற்பன். "பொங்கைம்புலனும் பொறியைந்துங் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்காரமனங்களே" என்கிறபடியே இருபத்திநான்கு தத்துவங்களுக்குமேல் இருபத்தைந்தாவது தத்துவம் ஜீவாத்மா; இருபத்தாறாவது தத்துவம் பரமாத்மா என்பது நூற்கொள்கையாதலால், ஒருவன் இதனையறியாமல் ஏதோ காரியப்பாடாக ஒன்றுமுதலாக எண்ணிக்கொண்டு போந்து இருபத்தாறளவிலே வந்தால் அந்த எண் தன்னைக் குறித்ததாக எம்பெருமான் வந்து நிற்பன் என்கிற விதுதான் பரிகணனைக்கு முகங்காட்டுவது; ஆகவிப்படிப்பட்ட நிர்ஹேதுகவிஷயீகாரத்தைப்* பொருமாநீள்படையிலே வெளியிட்டார். ஆக இப்படிப் பதிகந்தோறும் வெளியிடப்பட்ட ஸ்வபாவங்களை யுடையனான எம்பெருமானுடைய—என்றதாயிற்று.

ஸேவைக்கு எளிமையும் இனிமையுமுண்டு—ஆச்ரயணம் ஸுலபமாயும் போக்யமாயுமிருக்கும் (என்றும் உபதேசித்தார் என்கை.)

தொழுதால் அரும்பயனைய தரும்="தொண்டர்கள்—தொழுமின் அவனைத் தொழுதால், வழிநின்ற வல்வினை மாள்வித்து அழிவின்றியாக்கந் தருமே" என்றும் "தரும் அவ்வரும்பயனாய" என்றுமுள்ள பாசுரங்களாலே, 'அவனை பஜித்தால் ப்ராப்தி ப்ரதிபந்தகங்களையும் நிச்சேஷமாகப்போக்கி அழிவில்லாத பலன்களையும் தரும்—என்றும் உபதேசித்தார்.

உத்யோகத்தே வினைகளும்மாளும் = "நாளுநின்றடும் நம பழமையங் கொடுவினை உடனே மாளும்" என்கிற பாசுரத்தாலே, நாள்தோறும் இவ்வர்த்

இருபசை மலமறவுணர்வுகொண்டு நலஞ்செய்வதென்று தாம் மயர்வற மதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறுர் முதற்பத்தில்.

மாவை முடிக்கிற கொடிய கருமங்களெல்லாம் பக்தி பண்ணை முயலுமளவிலேயே மாண்டுபோம்—என்றும் உபதேசித்தார்.

அவனுரைத்த மார்க்கத்தே நின்று—அவ்வெம்பெருமானாலே (கீதையில்) அருளிச்செய்யப்பட்ட பக்தி மார்க்கத்திலே நின்று என்றபடி.

[இவ்விடத்தில் "அவனுரைத்த பக்தி மார்க்கத்தே நின்று" என்பதே மூலபாடம் என்று சில பெரியோர் பணிக்கும்படி. அப்பாடமே பொருத்தமாகத் தோன்றுகின்றது. "அவனுரைத்த மார்க்கத்தே நின்று" என்கிற பாடத்தில் இன்னமார்க்கம் என்று விசேஷித்துக் காட்டாமையாகிற குறையுண்டு.]

கண்ணபிரான் திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநனை வியாஜமாக்கியருளிச் செய்த கீதையின் முகமாக * பக்த்யா த்வநந்யயா ஶக்ய: * என்றும் * மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு, மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: * [மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு—மாமேவைஷ்யஸி யுக்த்வைவம் ஆத்மாநம் மத்பராயண: .] என்றும் அருளிச்செய்த பக்தி மார்க்கத்திலே நின்று—என்றதாயிற்று.

[1. இருபசை 2. மலமற 3. உணர்வுகொண்டு 4. நலஞ்செய்வது என்று.]
1. * நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னுமிவரை, ஒன்ற நும்மனத்து வைத்துள்ளி நும்மிருபசையறுத்து * என்கிற பாசுரத்தில்—"ஸ்ரீமந் நாராயணன் பிரமன் ருத்ரன் என்கிற மூன்று தெய்வங்களை மத்யஸ்தத்ருஷ்டியாக உங்களது நெஞ்சில் வைத்து, அத்தெய்வங்களின் ஸ்வரூபஸ்வபாவங்களை ப்ரமாணங்கொண்டு ஆராய்ந்து பார்த்தால் (நாராயணன் தவிர) இரண்டு தெய்வங்கள் பக்கலில் ஈச்வர புத்தியை யொழிக்க நேரும்" என்றருளிச் செய்தார். 2. *மனனகமலமறக்கழுவி நாளும் நந்திருவுடையடிகள் தம் நலங்கழல்வணங்கி * என்ற பாசுரத்தில்—மும்மூர்த்திகளும் ஸமமாவர் என்னும் விப்ரதிபத்தியாகிற அழுக்கு ஒழியும்படி மனத்தை விவேகத்தாலே பரிசுத்தப்படுத்துமாறு அருளிச்செய்தார். 3. *உணக்குமின் பசையற அவனுடை யுணர்வு கொண்டுணர்ந்தே * என்கிற பாசுரத்தில் அவனளித்த கீதையைக் கொள்ளும்படி அருளிச்செய்தார். 4. நன்றென நலஞ் செய்வது * என்ற பாசுரத்தில் அநந்யப்ரயோஜக பக்தியைப் பண்ணுங்கோளென்று அருளிச்செய்தார். ஆக இப்படி யருளிச்செய்தது.

தாம் மயர்வற மதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறுர் முதற்பத்தில். எம்பெருமான் மயர்வற மதிநலமருளினப்போலே ஸம்ஸாரிகளுக்குத் தம்முடைய க்ருபையாலே அஜ்ஞானத்தைப் போக்கி ஜ்ஞானபக்திகளை யுபதேசித்து பகவத் பஜநத்திலே மூட்டுகை முதற்பத்தின் அர்த்தம் என்றதாயிற்று. (219)

159933

சஞ்சிகையின் நிபந்தனைகள்.

1. பிரதிமாசமும் இச்சஞ்சிகை தவறாமல் வெளிவரும்.

2. சந்தாதாரர்கள் பூர்ணமான விலாசத்தை தெளிவாக எழுத வேண்டும்.

3. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 25-ம் தேதிக்குள்ளாகவே தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

4. இடம் மாறும் சந்தாதாரர்கள் முன்னமேயே விலாசத்தைத் தெளிவாக தெரிவிக்கவேண்டியது.

5. சந்தா நெம்பரைக் குறிப்பிட்டே இதனுடைய விலாசத்திற்கு தபால்கள் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

	1 மீ	3 மீ	6 மீ	1 வரு
அரைப்பக்கம்.	1-12-0	4-8-0	8-0-0	15-0-0
முழுப்பக்கம்.	3-0-0	8-0-0	15-0-0	25-0-0

ஏஜெண்டுகள் தேவை.

சென்னையிலும், வெளியூர்களிலும் நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்களை சேர்க்கத் தகுந்த பொறுப்புள்ள ஏஜெண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

T. நாராயணசாமி நாயுடு,

ப்ரொப்ரைட்டர்: நியூமன் பிரஸ், 19, டேவிட்சன் தெரு, மதராஸ்

அறிவிப்பு.

இந்த சஞ்சிகையைப்பற்றி விபரம் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் T. Narayanaswami Naidu, Proprietor, Newman Press, 19 Davidson Street, G. T. Madras. இந்த விலாசத்திற்கே லெட்டர்கள் எழுதவேண்டும். திருவாய்மொழியின் கீழ் சஞ்சிகைகளும், இச்சஞ்சிகையின் ஆசிரியர் அவர்களால் எழுதப்பட்ட இதர கிரந்தங்களும் இவ்விடத்தில் கிடைக்கும்.